ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

20.02.2013 - மலர் 09, இதழ் 51




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாமன்னன் பண்டாரவன்னியன்'




அரியாலையூர் சி.சிவதாசன்

*அந்த இருள் சூழ்ந்த நேரம். வானத்தில் வட்ட நிலா பவனி வந்துகொண்டிருந்தது. நட்சத்திரக் கூட்டங்கள் எங்கும் பரந்து விரிந்து வானத்தை அழகுபடுத்தின. அந்த நாள் ஐந்தாம் நூற்றாண்டின் காலப்பகுதி. தென்னிந்தியக் கடற்கரையில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட பாய்மரக் கப்பல்கள் அலைபாயும் நீலக்கடலைக் கிழித்துக்கொண்டு இலங்கைத் தீவினை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தன. மேலெழுந்து கீழ்விழும் கடலலைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது, அவை தமது பயணத்தைத் தொடர்ந்தன. வானத்தில் தவழ்ந்து செல்லும் வட்ட நிலாவின் ஒளி அந்தப் பாய்மரக் கப்பல்களுக்கு வழிகாட்டியாகவும் அவற்றில் பயணிப்பவர்கள் அச்சமின்றிப் பயணிக்கவும் பேருதவி புரிந்தது.*


இவ்வாறு தமது நாடுவிட்டு வேறு நாடு நோக்கிச் செல்லும் அவர்களின் நோக்கம் இலங்கைத் தீவைக் கைப்பற்றி ஆட்சி செய்ய வேண்டும் என்பதாகும். கூடவே, தமது நாட்டில் வாழும் மக்களை அங்கு குடியேற்றவேண்டும் என்ற எண்ணமுமாகும். இத்தகைய எண்ணம் கொண்டு தலைமை தாங்கி வருபவன் மனுநீதிச் சோழன் பரம்பரையில் வந்த ஸ்ரீவரராமதேவனின் மைந்தன் பாலகிருங்க மகாராஜா ஆவான். அந்த மகாராஜனின் மறுபெயர் குளக்கோட்டன் என்பதாகும். அவன் கடற்பயணம் மேற்கொண்டு இலங்கைத் தீவின் கரையைத் தொடுவதற்கு ஆயத்தமான போது, இருளகன்று பகலை நோக்கிச் செல்லும் விடிகாலையாயிற்று. பறவைகள்



## குளக்கோட்டன் வருகை

குரலெழுப்பி வானவெளியில் பறந்து செல்ல ஆதவன் கடல் முகட்டில் இருந்து வட்டவடிவமாய், சிவந்த நிறத்தில் வெளிவந்துகொண்டிருந்தான். அந்த அதிகாலைப் பொழுதில் மன்னன் குளக்கோட்டன் தன் படைவீரர்களை தயார்படுத்தி இலங்கை மண்ணில் காலடி பதித்தான்.

அவனுடைய எண்ணப்படி, அங்கு அவனையும், அவன் படைகளையும் எதிர்த்துப் போரிட பலங்கொண்ட அரசொன்று இருக்குமென நினைத்தது தவறாகப் போய் விட்டது. இவ்வாறு அவனும் அவன் படைகளும் வந்திறங்கிய இடம் இலங்கைத் தீவின் தென்கிழக்குப் பிரதேசமாகும். இங்கு கடல் நடுவே நீண்டு நிற்கும் மூன்று மலைத் தொடர்களும் எங்கும் பசுமையாகக் காட்சிதரும், காடுகளும் அவனை ஆச்சரியத்தின் உச்சிக்கே அழைத்துச் சென்றன. இருந்த



போதும் குளக்கோட்ட மன்னன் தான் வந்த நோக்கைச் செயற்படுத்தும் நிலையில் கண்ணும், கருத்துமாயிருந்தான். மும்மலைத் தொடரான மலைகள் கொண்ட இடமாகையால் தான் வந்திறங்கிய இடத்திற்குத் 'திருகோண மலை' எனப் பெயரிட்டு அழைக்கலானான். அவ்விடத்தை அழகிய பெரும் நகரமாக்கினான். மக்களின் இறை வணக்கத்திற்காக, மலைப் பகுதியில் சிவன் ஆலயம் ஒன்றினையும் நிர்மாணித்து, அவ்வாலயத்தின் அருகே தீர்த்தக்கேணி ஒன்றையும் தோற்றுவித்தான். சிவன் ஆலயத்தை 'திருக்கோணேஸ்வரம்' என்றும், தீர்த்தக்கேணியைப் 'பாபநாசம்' என்றும் மக்கள் அழைக்கலாயினர்.

இலங்கைத் தீவில் நெல்வயல்களை கிழக்குப் பிராந்தியத்தில் இம்மன்னனான குளக்கோட்டனே ஏற்படுத்தினான். பெரும் காடுகளை அழித்து அவற்றை நெல் விளைவிக்கும் வயல்கள் ஆக்கினான். பரந்த நெல்வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்காக, கந்தளாய்க் குளத்தை அமைத்து அக்குளத்திலிருந்து பல முனைகளில் வாய்க்கால்கள் ஏற்படுத்தி நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தினான். மேலும் இலங்கைத் தீவின் சிலாபப் பிரதேசத்தில் இம்மன்னன் முன்னேஸ்வரம் என்னும் சிவன் ஆலயத்தைக் கட்டுவித்து தன் தாய்நாடான சோழ தேசத்திலிருந்து நீலகண்ட சிவாச்சாரியாரையும் அவர் தம் குடும்பங்கள், உறவுகளையும் வரவழைத்து அக்கோவிலைப் பராமரிக்கும் பொறுப்பினை அவர்களிடம் கையளித்தான். தொடர்ந்து முன்னேஸ்வரம் பிரதேசத்தினை ஆட்சி செலுத்தும் பொருட்டு சந்திரகுல வம்சத்தைச் சேர்ந்தவனான நீதிநெறி வழி நடக்கும் பூபாலன் என்னும் மன்னனை அழைத்து முடிசூட்டுவித்தான். இம்மன்னன் சுகுனோத்துங்க மகாராஜன் என்றும் அழைக்கப்பட்டான்.

இந்தச் சுகுனோத்துங்க மகாராஜன் முன்னேஸ்வரப் பிரதேசத்தை அறுபத்தியாறு கிராமங்களாக்கி மக்கள் வாழ்வுக்காக நெல்வயல்களை ஏற்படுத்தி பல நன்மைகளைச் செய்து ஆட்சி செலுத்தி வ[...]லானான். இந்த மன்னனே குளக்கோட்ட மகாராஜாவால் முதன்முதலாக இலங்கைத் தீவிற்கு அழைத்துவரப்பட்ட வன்னியனாவான்.(தொடரும்)

---

### எமது கண்களை நாம் ஏன் அடிக்கடி சிமிட்டுகிறோம்?

**எஃப்.பாத்திமா ரஃப்அத் ஆரா, புத்தளம்.**

நாம் எமது கண்களை, நாளொன்றுக்கு ஏறக்குறைய 10,000 தடவைகள் சிமிட்டுகிறோம். ஒரு தடவை சிமிட்டுவதற்கு 300 millisecond போன்ற மிகக் குறைந்த நேரமே தேவைப்படுகிறது. கண்களை ஈரலிப்பாக வைத்திருப்பதே, இச்செயற்பாட்டின் பிரதான நோக்கமாகும். கண்ணீரும், இன்னும் சில சுரப்புகளும் கண்களின் மேற்பரப்பை நனையச்செய்ய உதவுகின்றன. கண்கள் உலர்ந்து போய், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் இதன்மூலம் குறைக்கப்படுகின்றது. இதுதவிர, பார்வையின் குவியத்தை சரிசெய்யும்போதும், தூசுகளை அகற்றவும், உணர்ச்சிவசப்படும் போதும் கண் சிமிட்டல் நடைபெறுகின்றது. கணினித்திரையை உற்று நோக்கியவாறு இருக்கும்போதும் கண்களை சிமிட்டும் விதம் குறைவடைகிறது. இதனால், கணினியின் முன் தொடர்ந்து வேலை செய்வோருக்கு கண்களில் உறுத்தல், எரிவு, வலி போன்றன ஏற்படவும் இது காரணமாக அமைகின்றது.



விஜய் Bookvin

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

## அறிவுத் தேடல்

**நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ரூபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.**

### முழங்கையில் அடிபட்டால், மின்சாரம் பாய்வது போல் (Shock) உணர்வது ஏன்?

**ப.மு.அல்பாயிட், கிண்ணியா - 02, திருகோணமலை.**

முழங்கையின் மூட்டுக்கு அண்மித்த பகுதியில் (Funny bone) செல்லும் நரம்புகளில், கழுத்திலிருந்து, கைவிரல்கள் நோக்கிச் செல்லும் 'Ulnar' என்றழைக்கப்படும் நரம்புதான் இதற்கு முக்கிய காரணமாகும். இந்த நரம்பு செல்லும் பாதையில், முழங்கைப்பகுதிதான் மிகவும் பாதுகாப்பற்றதாகும். அதாவது, அந்த நரம்பு அவ்விடத்தில், சதையால் பெரிதாக மூடப்பட்டிருப்பதில்லை. இதனால், அது நேரடியாக பலமாகப் பாதிப்படைகிறது. இந்த நரம்பு சிறு விரல் மற்றும் மோதிர விரலின் பாதிப் பகுதியுடன் தொடர்புபட்டிருப்பதால், அடியின் விளைவுகள் அந்த விரல்களிலும் ஏற்படலாம். 'மின்சார' உணர்வுக்கு, இந்த பாதுகாப்பற்ற தன்மையே காரணமாகின்றது.



**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**


அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# பார்வைப்புலனற்றோருக்கு கல்வி கற்பதற்கு வழிகாட்டிய லூயி ப்ரெய்ல்

**கண்கள் இருந்தும் இந்த உலகத்தைக் காண முடியாத பார்வைப்புலனற்றோரும் நம் மத்தியில் இருக்கின்றனர். இவர்கள் உலகைக் காணும் விதம் வித்தியாசமானது. ஆரம்பகாலத்தில் இருண்ட உலகத்தில் அவர்களது வாழ்க்கை நகர்ந்தாலும் காலப்போக்கில் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் மட்டுமன்றி, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு விடயங்களைச் செய்யவும் அவர்கள் ஆற்றல் பெற்றவர்களாக மாறினர். அதற்காக வழியமைத்துக் கொடுத்தவர் 'லூயி ப்ரெய்ல்' ஆவார்.**



## லூயி ப்ரெய்லின் ஆரம்பகால வாழ்க்கை

1809ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி பிரான்ஸின் பெரிஸ் நகருக்கு அருகாமையில் குவ்ரே என்ற கிராமத்தில் சாதாரண குழந்தையாகவே லூயி ப்ரெய்ல் பிறந்தார். எனினும்,காலஓட்டத்தில் துரதிர்ஷ்டவசமாக அவர் செய்த தவறினால் ஒரு கண்பார்வையை இழந்தார். அதேவேளை, மற்றைய கண் 'சிம்பதடிக் ஒப்தெல்மியா' என்ற நோயினால் பாதிக்கப்பட்டதை அடுத்து, அதன் பார்வைப் புலனும் பறிபோனது.

ஒருநாள் சிறுவன் லூயியின் வீட்டிற்கு வருகை தந்த மதபோதகர் ஒருவரின் வேண்டுகோளின்படி, லூயி தேவாலயம் சென்று, அங்கு அன்டோனி பீச்ரட் என்பவரை சந்தித்தார். அவர் தமது பாடசாலையில் லூயியை சேர்த்துக்கொண்டார். எனினும் அங்கு கற்பித்தவற்றை லூயியால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதனைக் கண்ணுற்ற ஆசிரியர், பார்வைப்புலனற்ற மாணவர்களுக்கான அரச நிறுவனத்தில் லூயியை சேர்த்தார். அங்கு, லூயி வதிவிட கற்கையை மேற்கொண்டார். வகுப்பில் கற்றலில் சூரனாகத் திகழ்ந்தார் லூயி. பல பாடங்களில் திறமை காட்டிய அவர், இசைத்துறையில் கற்கவே பேரார்வம் காட்டினார்.



## லூயியின் பரீட்சார்த்த முறை

அன்று பார்வையற்ற குழந்தைகளுக்காக, மேல் எழும்பியவாறு எழுத்துக்கள், படங்கள் உள்ள புத்தகங்களே இருந்தன. எனினும், அந்த எழுத்துக்களைத் தொட்டு வாசிப்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. இதனால் பார்வைப்புலனற்ற குழந்தைகள் படிக்கும்போது பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். ஒருநாள் லூயியின் பாடசாலைக்கு ஒய்வுபெற்ற ராணுவத் தளபதியான சார்ள்ஸ் பாபியர் என்பவர் வருகை தந்தார். அவர் இரவில் சிப்பாய்களிடம் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கென ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்திருந்தார். இந்த முறை பார்வைப் புலனற்ற மாணவர்களுக்குப் பொருத்தமானது என்று கருதிய அவர், மேல் நோக்கியவாறு புள்ளிகளைக் கொண்ட ஒரு மொழியினை உருவாக்கினார்.ஆனால், அதுவும் பல குறைபாடுகளைக் கொண்டதாக இருந்தது. எனினும், இந்த புள்ளி முறையினை அடிப்படையாக வைத்து பார்வைப் புலனற்றவர்கள் வாசிக்கக்கூடிய அரிச்சுவடியினைத் தயாரிப்பதற்கு லூயி வென்றார்.


லூயி ப்ரெய்ல்

## லூயியின் ப்ரெய்ல் முறை

லூயியின் பரீட்சார்த்த முறைகள் வெற்றி அளித்தன. அதுவரை 12 புள்ளிகளினால் மேற்கொள்ளப்பட்ட குறியீட்டு முறை, பின்பு 36 புள்ளிகளினால் காட்டப்பட்டது. தான் கண்டுபிடித்த முறையினை தொடர்ந்தும் முன்னேற்றிய லூயி, கணிதம் மற்றும் இசையினைக் குறிப்பிடும் முறையினையும் இதே முறையில் கண்டுபிடித்தார். லூயி ப்ரெய்லின் திறமை காரணமாக, தான் கல்வி கற்ற கல்லூரியிலேயே கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதற்கிடையில் ப்ரெய்ல் முறை குறித்த குறிப்புகள் அடங்கிய நூல் ஒன்றையும் அவர் வெளியிட்டார். 'Method of writing words, Music and plain songs by means of dots, For use by the Blind and Arranged for them' என்று அந்த நூலுக்கு பெயரிடப் பட்டிருந்தது.

லூயி அறிமுகப்படுத்திய எழுத்து முறையானது, முப்பத்தியாறு புள்ளிகளைக் கொண்டது. இந்த புள்ளிகளைக்கொண்டு வட்ட வடிவங்கள் அறுபத்தி மூன்றையும் உருவாக்க முடியும். அத்துடன், ஆறு புள்ளிகள் சேர்ந்த தொகுதி 'பிரெய்ல் அகராதி' என்றும் அழைக்கப் பட்டது.

## தொழில்நுட்ப முன்னேற்றம்

தற்போதுள்ள தொழில்நுட்பத்தின் மகிமை காரணமாக, ப்ரெய்ல் ஊடகத்துறையிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்தவகையில், ப்ரெய்ல் எழுத்து பயன்பாடு இன்றியே, பார்வைப்புலன் அற்றவர்களும் கணினியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு தற்போது கிட்டியுள்ளது. -ப்ரியா

## வாசகர் முகம்

இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்:
**யூ.மர்யம் ஹானிம்,**
மருதமுனை.



DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பெயர் .முகவரியைக் குறிப்பிட்டு 0773- 123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

# செயற்கைத் தீவு!



சுதன் உணவு உட்கொண்ட சிறிது நேரத்தின் பின்னர் யாரோ உள்ளே நுழைந்தார்கள். இயந்திர மனிதனோ என்று ஏறிட்டுப் பார்த்தான் சுதன். இல்லை. அவர்களைக் கடத்தி வந்த அந்தக் குள்ள ஆசாமியே அங்கு வந்தான். அவனைப் பார்த்ததும் சுதனுக்கு ஆத்திரம் மேலிட்டது.

"எங்களை ஏமாத்திக் கடத்திக்கிட்டு வந்திட்டீங்க இல்ல....!" கோபத்துடன் கேட்டான் சுதன். அந்தக் குள்ள மனிதன் கலகலவெனச் சிரித்தான். அது அதனுக்கு மேலும் எரிச்சலையே ஏற்படுத்தியது. "ஏய் பிரியன் எங்கே...? நான் அவனைப் பார்க்கவேண்டும்.....!" சுதன் இரைந்து கேட்டான்.

"ம்! அவசரப்படாதே தம்பி. பிரியன் வருவான்" என்று கூறிய அந்த குள்ள நபர் வெளிப்பக்கமாகத் திரும்பி "பிரியன்! உள்ள வா....!" என்றான். பிரியன் உள்ளே வந்தான். அவனும் சுதன்போலவே உடை ஒன்றை அணிந்திருந்தான். கண்களிலும் முகத்திலும் இனம்புரியாத பீதி படர்ந்திருந்தது. சுதன் எழும்பி ஓடிப்போய் பிரியனைக் கட்டிக் கொண்டான். இருவரும் பேச்சு வராமல் தடுமாறினார்கள்.

"நீங்கள் இரண்டு பேரும் இப்படி வந்திருங்கள். உங்க கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் நான் விளக்கம் சொல்கிறேன்....!" அந்தக் குள்ள நபர் அவர்களை அழைத்தான்.

"நீங்கள் எங்களை ஏன் கடத்தி வந்தீங்க? நாங்க இங்க வந்து எவ்வளவு நேரம் ஆயிடுச்சுன்னு தெரியல. எங்க வீட்டுல எங்களைக் காணாமல் தேடுவாங்க....!" பிரியன் ஆவேசத்தோடு இரைந்தான்.

குள்ள நபர் புன்னகைத்தபடி, "நீங்கள் இங்கு வந்து 24 மணித்தியாலங்கள் கழிந்துவிட்டன. நீங்கள் இரண்டு பேரும் இங்கிருப்பது உங்கள் வீடுகளுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் கவலைப்படாமல் இருப்பார்கள். உங்களால் எங்களுக்குச் சில காரியங்கள் ஆகவேண்டும். அதெல்லாம் ஆனபின் எவ்வாறு கூட்டி வந்தோமோ அப்படியே கூட்டிப் போய் விட்டுவிடுகிறோம்".

"சரி! நாங்க இப்போ எங்கே இருக்கோம்....?" சந்தேகத்தைக் கேட்டான் பிரியன்.

"சொல்கிறேன்! இப்ப நாம் இருக்கும் இந்த இடத்தின் பெயர் ஹார்ட்லேண்ட். அதாவது இதயத்தீவு. இதுவொரு தனி உலகம். தனித்தீவு...!"

"என்ன தீவா? கிரகம்னு ஆரம்பத்துல சொன்னீங்க....!" இடைமறித்துக் கேட்டான் சுதன்.

"தம்பி! முதல்ல இது ஒரு தீவு. இந்தத் தீவுக்குள் ஓர் உலகம். அந்த உலகத்துக்குள் ஒரு கிரகம். புரியவில்லையா? எல்லாவற்றையும் விளக்கமாகவே அறியப் போகிறீர்கள். சரி. பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிங்களா?"

"ஆமாம்! 7075 தீவுகள் உள்ளடக்கியது தானே!" என்று பிரியன் கேட்டான்.

"சரி! அதே போல ஏராளமான தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய இந்தப் பகுதி சுனாமி மாதிரி ஓர் ஆழிப்பிரளய காலத்தில் அழிந்து கடலுக்குள் மூழ்கி விட்டது. அதில் சில காலப்போக்கில் சிறு சிறு குன்றுகளாக மேடுகளாகத் தெரிய ஆரம்பிக்க.... அப்படியான ஒரு மேட்டைத் தேர்ந்து இந்தத் தீவை உருவாக்கியிருக்கிறோம்...!"

"இது உருவாக்கப்பட்ட தீவா?"

"ஆமாம்! ஆனால், இயற்கை எதுவுமே இல்லாமல் எங்களுக்கு எது தேவையோ அதை மட்டும் செயற்கையாக அமைத்திருக்கிறோம். உதாரணத்துக்கு இந்த அறையின் கூரையைப் பாருங்கள்......"


குள்ளர் சொல்ல இருவரும் அண்ணாந்து கூரையைப் பார்த்தார்கள். குள்ளர் முன்னாலிருந்த கணினியில் ஏதோ ஒரு விசையை முடுக்கிவிட, கூரை அப்படியே ஓரமாகிப் போனது. வானம் தூய நீலவடிவில் வியாபித்துத் தெரிந்தது.

"இப்போது வானம் தெரிகிறதா? ஒரு வெள்ளைப் புள்ளியோ, கரும்புள்ளியோ தெரிகிறதா? இல்லைத் தானே! இருக்காது. எப்படியென்றால் இது இயற்கை வானம் இல்லை. நாங்கள் படைத்தது. உருவாக்கியது செயற்கை வானம். இத்தீவை பூரணமாக மூடி உயரமான கண்ணாடிக் கூண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. சூரியனுடைய ஒளிக்கதிர்களைச் சேமித்து தேவையான நேரத்தில் அதனைப் பயன்படுத்துவோம். நிலவு கூட எங்களின் தயாரிப்புத்தான். இந்தத் தீவின் முதலாவது அம்சம் தரைப்பகுதிதான். இங்கு மனித இயக்கப்பாட்டுக்குத் தேவையான சக்தியைத் தரக்கூடிய உணவு வகைகள், பழ, தாவர, தானிய வகைகள் உற்பத்தியாகின்றன. திட்டமிட்ட அடிப்படையில் உரிய பராமரிப்பின்கீழ் இவை வளர்க்கப்படுவதால் உடல் நலம் பாதுகாக்கப்படுகின்றது. இங்கு சூழலை மாசுபடுத்தக்கூடிய எந்தவொரு விடயமும் இல்லை. பூகோள வெப்பம், பூகோள குளிர், கனிய வளக் குறைவு, சூழல் மாசடைதல், ஓசோன் மண்டல விளைவு போன்ற பல்வேறு காரணிகளால் உலகமே அழிந்துபோய்விடும் என்னும் அச்சுறுத்தல் நிலவுகின்ற இந்தக் காலக்கட்டத்தில் எங்கள் படைப்புலகம் ஒரு மாற்று ஏற்பாடு மாதிரித்தான்....! ஆனா, ஒரேயொரு விடயத்தை மட்டும் இங்கிருக்கிற அனைவரும் கட்டாயம் பின்பற்றவேண்டும்...."

"என்ன அது?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டான் சுதன்.

"அந்தக் குள்ள நபரும் அவர்களை ஊடுருவிப் பார்த்தபடியே, மேலும் பல ஆச்சரியமான விபரங்களைக் கூறத் தயாரானான். (தொடரும்)

# இன்பமும் துன்பமும்



நகரத்தில் இருந்து தனது சொந்தக் கிராமத்திற்கு வந்திருந்த செல்வராஜ் தன் மகன் பாபுவை அழைத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றார். புற்கள், செடி, கொடிகள் நிறைந்த அழகான அக்காட்டில், உள்ள விலங்குகள் அவர்களைக் கண்டு விடைத்துக்கொண்டு ஓடின. மைனா, கவுதாரி, மணிப்புறா போன்ற பறவைகள் அங்கும் இங்குமாகப் பறந்து திரிந்தன. மொட்டைப் பனை மரங்களில் ஆந்தைகளும், கிளிகளும் பதுங்கி இருந்தன. இவற்றைக் கண்டு பரவசமடைந்தான் பாபு.

மரங்களில் உள்ள தளிர்களையும் இலைகளையும் காய்களையும் இரையாக்கிக்கொள்ள நினைத்த வெள்ளாடுகள் முன்னங்கால்களை மரங்களில் ஊன்றியபடி அவற்றை உண்டன.

ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்கள் அங்குள்ள பச்செடிகளில் முட்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல் மிக லாவகமாக பழங்களைப் பறித்து ருசித்தனர். ஒற்றையடிப் பாதை வழியே அப்பாவுடன் சென்ற பாபு சிவந்த பழங்கள் இருந்த ஒரு செடியைப் பார்த்தான். அப்பாவிடம் அது பற்றிக் கேட்டான். அதுதான் கள்ளிப்பழம் என்று தந்தை கூறினார்.

"அதை சாப்பிடலாமா?" என்று பாபு கேட்டதும், செல்வராஜ் கள்ளி முட்கள் கைகளைப் பதம் பார்த்துவிடாமல் மிகவும் கவனமுடன் கள்ளிப் பழங்களைப் பறித்து மகனுக்குக் கொடுத்தார். "மகனே! நான் இப்பழங்களைப் பறித்தது போல் முட்கள் நிறைந்த இந்த மரங்களில் தங்களின் இரையை தேடிக்கொள்ளும் வெள்ளாடுகளைப் பார்த்தாயா? அவை இச்செடியிலிருந்த பழங்களை எவ்வளவு லாவகமாகப் பறித்து உண்கின்றன. இவற்றில் இருந்து நீ எதையாவது கற்றுக் கொண்டாயா?" என்று கேட்டார் அப்பா.

"ஒன்றும் புரியவில்லையே அப்பா" என்றான் பாபு. வாழ்க்கையும் துன்பம் எனும் முட்கள் நிறைந்ததுதான். முட்களுடன்தான் இனிய கனிகள் இருப்பது போன்று, துன்பம் நிறைந்த வாழ்க்கையில் இன்பமும் இருக்கிறது. மிகவும் கவனமாக முயன்று போராடினால், துன்பம் எனும் முட்களைத் தவிர்த்து இன்பமெனும் கனிகளைப் பெறலாம். முட்களைக்கண்டு பயப்படக்கூடாது. முயன்றால் வெற்றி, போராடினால் ஜெயம்! இப்போது உனக்குப் புரியுமே!" என அப்பா செல்வராஜ் கேட்க, "நன்றாகப் புரிகிறது அப்பா" என்றவாறே பாபு சிவந்த கள்ளிப்பழங்களை ருசித்துக் கொண்டு தந்தையுடன் நடைபோட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐரோப்பாவில் ஆரம்பித்து, உலகையே ஆட்டிப்படைத்த

# முதலாம் உலக யுத்தம்

*உலகில் இதுவரையான காலப்பகுதியில் நிகழ்ந்த மாபெரும் இரு யுத்தங்கள் தொடர்பான நினைவுகள் இன்றும் எம்மிடம் எஞ்சியுள்ளன. 'முதலாம் உலக யுத்தம்' மற்றும் 'இரண்டாம் உலக யுத்தம்' என்பனவே அந்த மாபெரும் யுத்தங்களாகும். மிகவும் குறுகிய கால இடைவெளியில் நிகழ்ந்த இந்த யுத்தங்கள் காரணமாக, உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. குரோதம், பொறாமை, பழிவாங்கும் உணர்வு ஆகிய தீய உணர்வுகளுக்குப் பதிலாக, அன்பு, அமைதி, கருணை என்பனவே உயர்ந்த மனிதக் குணங்கள். அவைதான் மனிதருக்கு மிக அவசியம் என்ற விடயத்தினை இந்த யுத்தங்கள் மனிதர்களுக்கு உணர்த்திச் சென்றன.*

*முதலாம் உலக யுத்தம் 1914 ஜுலை 28 ஆம் திகதி ஆரம்பித்து, 1918 நவம்பர் 11 ஆம் திகதி வரை சுமார் நான்கு ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது. முதலில் ஐரோப்பாவில் ஆரம்பித்த யுத்தம், படிப்படியாக உலக நாடுகள் எங்கிலும் வியாபித்தது.*

## முதலாம் உலக யுத்தத்திற்கான காரணங்கள்

இந்த யுத்தத்திற்குப் பின்னணியாக பல காரணிகள் இருந்தன. ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட அதிகார மோதல் அவற்றுள் பிரதான காரணியாகும். அத்துடன், எல்யாஸ்-லொரேன் பிரதேசம் பற்றிய சர்ச்சை, ஜேர்மனியின் பிஸ்மாக் உடன்பாட்டுக்கொள்கை, காலனித்துவத்தினை வென்றெடுப்பதற்கான போட்டி, கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெற்ற சிக்கலான அரசியல் நிலைமைகள், ஜேர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கை, ஐரோப்பா இரண்டு பிரதான அணிகளாகப் பிரிந்தமை, சேர்பியாவின் சரஜேவோவில் இடம்பெற்ற ஒஸ்ட்ரிய அரசகுமாரனின் படுகொலை ஆகிய காரணிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டமையால், முதலாவது உலக யுத்தம் ஏற்பட இவையும் காரணமாக அமைந்திருந்தன.





ஜேர்மனியின் பிரபல ஆட்சியாளரான ஒட்டோ வொன் பிஸ்மார்க், பிரான்ஸுக்கு எதிராக அதிகாரம் மிக்க நாடுகளை தம் பக்கம் ஈர்த்துக்கொள்வதற்காக, 'மத்திய பலம்பெற்ற அணி' என்றவோர் அமைப்பைக் கட்டியெழுப்பினார். ஜேர்மனிக்கு எதிராகப் பிரித்தானியா, ரஷ்யா, அமெரிக்கா என்பன செயற்பட்டு, 'நேச அணி' என்ற அமைப்பின்கீழ் பிரான்ஸுக்கு ஆதரவளித்தன. இதன்படி ஐரோப்பாவில் இரண்டு அணிகள் உருவாகின.

ஒஸ்ட்ரியாவின் முடிக்குரிய இளவரசரான ஆச்டியூக் பிரான்ஸ் ஃபெர்டினன்ட்டும் அவரது மனைவியும் சேர்பியாவின் சரஜேவோவில் சேர்பியர்களினால் கொல்லப்பட்டமை சேர்பியாவுக்கும் ஒஸ்ட்ரியாவுக்கும் இடையில் முதலாவது மோதலை ஆரம்பித்தது. இம்மோதல் பின்னர் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. ஜேர்மனி பெல்ஜியத்தினூடாகப் பிரவேசித்து பிரான்ஸ் மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. இதனை அடுத்து பிரித்தானியா ஜேர்மனியப் படைகள்மீது தாக்குதல் நடத்தி நேச அணியின் பலத்தினை அதிகரித்தது. இதனை அடுத்து, இத்தாலியும் ஜேர்மன் அணியில் இருந்து விலகி, நேச அணியுடன் இணைந்துகொண்டது. இருதரப்புக்கும் இடையில் தரைமார்க்கப் போரும் கடும் கடல் மார்க்கப் போரும் ஏற்பட்டது. 1915 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி ஏராளமான அமெரிக்கப் பிரஜைகள் பயணித்த 'லுசிட்டானியா' கப்பல் மீது ஜேர்மனி தாக்குதல் நடத்தியதால், அமெரிக்கா யுத்தத்தில் பங்குகொண்டது.



இந்த யுத்தத்தில் ஜேர்மனி உட்பட, ஏனைய மத்திய பலம்பெற்ற நாடுகள் தோல்வியை சந்தித்தன. இதன்போது, உயிரிழப்புகள் மற்றும் சொத்திழப்புகளுடன் ஏற்பட்ட அழிவுகள் யாவும் பேரழிவுகளாக இருந்தன. யுத்தத்தின் குற்றவாளியாக ஜேர்மனி கருதப்பட்டதுடன், சர்வாதிகார ஆட்சியை நடத்திய ஏகாதிபத்திய அரசுகள் சிதறின. அரச பரம்பரை ஆட்சிகளும் வீழ்ச்சி கண்டன. இவ்வாறான யுத்தம் மீண்டும் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் 'சர்வதேச சங்கம்' என்ற பெயரில் சர்வதேச அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. 'யுத்தம் ஒரு சாபமாகும். அது முழு மனித குடும்பத்திற்கும் உலகத்திற்கும் பெரும் அழிவினை ஏற்படுத்தக் கூடியது. சமாதானம், அமைதி என்பனவே நிலையானவையாகும்.

(அடுத்த வாரம்
2ஆம் உலக யுத்தம்)

**வசந்தி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய வாழ்வு

*சாந்தனும் காந்தனும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி கற்று வந்தனர். ஆனாலும் இரண்டு பேரும் வேறுபட்ட குணாதிசயங்களை உடையவர்கள். சாந்தன் நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குவான். கற்றலிலும் ஆர்வத்துடன் செயற்படுவான். ஆனாலும், காந்தனில் இந்த பண்புகளைக் காணமுடிவதில்லை. அவன் எப்போதும் சோர்ந்துபோய்க் காணப்படுவான். அடிக்கடி நோய்வாய்ப்பட்டான். இதனால், ஆசிரியர் காந்தனுக்கு தினமும் ஆலோசனைகளை வழங்கினார். பாடசாலை வரும்போது காலை உணவை உட்கொண்டு விட்டு வரும்படியும் பகல் போஷணத்திற்காகக் கொண்டுவரும் உணவை முழுமையாக உண்ணும்படியும் வற்புறுத்தினார். கண்ட கண்ட உணவு வகைகளைச் சாப்பிட வேண்டாம் என்றும் எச்சரித்தார்.*

*இவ்விருவரது கதையைக் கூறும்போது, உங்களுக்கு காந்தன் ஒழுங்காக உணவு உண்ணும் வழக்கம் இல்லாதவன், அதனால் அவன் உடல் ஆரோக்கியமற்றவனாகவே காணப்படுகின்றான் என்பதை உணரக்கூடியதாக இருக்கும். ஆக, உணவு என்பது எந்தளவுக்கு அவசியமானதொன்று என்பதை இந்தக் கட்டுரையினூடாக நோக்குவோம்.*

## அடிப்படைத் தேவை

உணவு, உடை, உறையுள் என்பன மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். இதன்படி, மனித வாழ்க்கைக்கு உணவு எந்தளவு முக்கியமானது என்பதை அறிந்துகொள்ளலாம். உணவு இன்றி உயிர் வாழமுடியாது. அத்துடன், நாம் வாழும் காலமெல்லாம் உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாக்கவும் உணவு அவசியமாகின்றது.

## உடலுக்கு உணவு

உடலுக்குத் தேவையான உணவை பிரதானமாக மூன்று வகைகளில் உள்ளடக்கலாம்.

i சக்தி வழங்கும் உணவு ii வளர்ச்சிக்கான உணவு
iii பாதுகாப்பளிக்கும் உணவு என்பவையே அவையாகும்.

## சக்தி



நாம் அன்றாடம் எமது வாழ்வில் நடத்தல்,ஓடுதல், பாய்தல், கல்வி கற்றல், நித்திரை செய்தல் போன்ற பலவகையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். இந்த செயற்பாடுகளின்போது, உடல் சக்தி விரயமாகின்றது. எமது உடலுக்குத் தேவையான சக்தி நாம் அன்றாடம் உண்ணும் உணவு வகைகளில் இருந்தே கிடைக்கின்றது. முறையாக உணவு உட்கொள்ளாவிட்டால் எமது உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்காமல் போகின்றது. அப்போது உடல் பலவீனம் அடைகின்றது.

## சக்தி வழங்கும் உணவு

நாம் உண்ணும் உணவில் இருந்து உடலுக்குத் தேவைப்படும் 55%-65% மான போஷாக்கும் பலமும் கிடைப்பது போஷாக்கான உணவு வகைகளின் மூலமாகும். முக்கியமாக, காபோஹைட்ரேட் மற்றும் கொழுப்புச் சத்துக்கள் உள்ள உணவுகள் இவற்றில் அடங்கும். நாம் உண்ணும் உணவில் 2/3 பங்கு உடலுக்கு சக்தியைத் தரும் உணவாக இருக்கவேண்டும். உடலுக்குத் தேவையான சக்தியில் 15%-25% வரையான சக்தி கொழுப்புச்சத்துள்ள உணவுகளில் இருந்தே கிடைக்கின்றது.

**சக்தியை வழங்கும் உணவுகள்**

சோறு, தானிய வகைகள் (குரக்கன், சோளம் போன்றவை), உருளைக்கிழங்கு, வற்றாளை, மரவள்ளி, பலா, ஈரப்பலா, பட்டர், மாஜரின், மரக்கறி வகை, கீரை வகை, மாமிச வகை, முட்டை, பால் என்பன.

## வளர்ச்சி



தாயின் கருவறையில் கரு உருவானது முதல் குழந்தை பிறந்து-வளர்ந்து-உயிர்வாழும் காலமெல்லாம் எமது உடல் படிப்படியாக வளர்ச்சியடைகின்றது. குறிப்பாக குழந்தைப் பருவம், பாடசாலைப் பருவம், இளமைப் பருவம் என்ற அடிப்படையில் 20 வயதைத் தாண்டும் வரையிலும் உடலின் ஒவ்வொரு உறுப்பும் வளர்ச்சியடைகின்றது. இவ்வாறான வளர்ச்சியுடன் உடலுக்குப் பலமும் ஊக்கமும் ஏற்படுவதோடு, ஆளுமை வளர்ச்சியும் ஏற்படுகின்றது. இந்த வளர்ச்சிக்கு முறையான உணவு தேவைப்படுகின்றது.

## வளர்ச்சிக்கு உதவும் உணவுகள்

நாம் உண்ணும் உணவு வகைகளில் 10% - 15% வரையான சக்தியானது வளர்ச்சிக்கு உதவும் உணவு வகைகளில் இருந்தே கிடைக்கின்றது. புரதம் மற்றும் விற்றமின்கள் அடங்கிய போஷாக்குள்ள உணவு வகைகளில் இருந்தே, எமது உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களைப் பெறமுடிகின்றது. உடலுக்கு மிகவும் அத்தியாவசியமான அமோனியா அமிலம் இந்த வகை உணவுகளில் இருந்தே கிடைக்கின்றது.

**வளர்ச்சிக்கு உதவும் உணவுகள்**

பால், மீன், முட்டை, மாமிச வகை, தானியங்கள் (கடலை, கௌபீ, சோயா, பருப்பு, பயறு) மற்றும் மரக்கறி வகைகள்.

## பாதுகாப்பளிக்கும் உணவுகள்

உடலுக்குத் தேவையான பாதுகாப்பை சத்தான, ஆரோக்கியமான உணவுகளே வழங்குகின்றன. இவை உடலில் நோய் எதிர்ப்புசக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன. இந்த வகை உணவுகளில் உள்ள விற்றமின்கள் மற்றும் கனியுப்பு வகைகளால் உடலுக்குப் பாதுகாப்பும் கிடைக்கின்றது. இத்தகைய உணவு வகைகளில் தினமும் 400 கிராம் அளவினை நாம் உட்கொள்ள வேண்டும்.

**பாதுகாப்பளிக்கும் உணவுகள்**

தினமும் மரக்கறி மற்றும் பழங்கள் ஐந்தினை (2 வகையான மரக்கறிகள் மற்றும் 3 வகையான பழங்கள் என்ற அடிப்படையில்)உணவுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க்கு அவசியமான உணவு

## உணவு உண்ணத் தவறினால்....

போஷாக்குள்ள உணவுகளை உட்கொள்ளாவிட்டால் எமது உடல் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இதனால், அடிக்கடி நோய்வாய்ப்படுதல், கற்றலில் ஆர்வம் குறைவு, சோர்வு போன்ற பலவீனங்கள் எம்மில் ஏற்படும். வளரும் பருவத்தில் தேவையான போஷாக்குகள் உடலுக்குக் கிடைக்காவிட்டால் அல்லது அவை உள்ள உணவு வகைகளை உண்ணாவிட்டால் மந்தபோஷணையால் பாதிக்கப்பட வேண்டி ஏற்படும். அத்துடன், உடலில் காணப்பட வேண்டிய நோய் எதிர்ப்புசக்தியும் படிப்படியாகக் குறைவடைந்து, உடல் பலவீனத்திற்கும் நோய்களுக்கும் உள்ளாக வேண்டி ஏற்படும். ஆகவே, தேகாரோக்கியமும் திடகாத்திரமும் உடைய மனிதனாக வாழ முறையாகவும் ஒழுங்காகவும் உணவு உட்கொள்ளும் பழக்கம் அவசியமாகின்றது.



## மூன்று வேளைகள் உணவு வேண்டுமா?

பாடசாலை செல்லும் பருவத்தில் உள்ள பிள்ளைகள் ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் அவசியம் உணவு உட்கொள்ள வேண்டும். காலை, மாலை, இரவு என்ற அடிப்படையில் அந்த மூன்று வேளைகளும் அமைய வேண்டும். இம்மூன்று வேளைகளிலும் உரிய முறையில் உணவு உட்கொள்ளாதபோது தேகாரோக்கியத்திற்குப் பாதிப்பு ஏற்படும். அத்துடன், பிள்ளைகள் இந்த பிரதான மூன்று வேளைகளுக்கும் மேலதிகமாக மேலும் இரண்டு வேளைகள் உணவு உட்கொள்வது அவசியமாகின்றது.

## மேலதிகமான உணவு வேளைகள்

பொதுவாக பிள்ளைகள் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பார்கள். இதனால் அதிகளவு சக்தி இழக்கப்படுகின்றது. அவ்வாறு இழந்த சக்தியை சமநிலையில் பேண வேண்டிய தேவை உள்ளது. அதனால், காலை உணவு உட்கொண்டு மூன்று மணித்தியாலங்களின்பின் (காலை - 10.00 மணியளவிலும்) மற்றும் பகல் உணவு உட்கொண்டு மூன்று மணித்தியாலங்கள் கழித்து (மாலை 3-4 மணியளவிலும்) மேலதிக உணவு வேளைகள் இரண்டும் அமையவேண்டும். மேலதிக உணவாக பாண், பனிஸ், பிஸ்கட், பழங்கள் அல்லது ஒரு குவளை பால் என்பனவற்றை உட்கொள்ளலாம். ஆனால், இந்த வேளைகளில் வயிறு நிறைய உண்ணக்கூடாது.



## போதியளவு சக்தி கிடைக்காவிட்டால்...

உடலுக்குத் தேவையான உரிய போஷாக்குக் கிடைக்காவிட்டால் பல்வேறு விதமான நோய்கள் ஏற்ப்டுகின்றன. அவற்றுள் மிக முக்கியமான நோய்களாக....

- போஷாக்கின்மை (மந்த போஷாக்கு).
- குருதிச்சோகை.
- உயரத்திற்கு ஏற்ற உடல் நிறை இல்லாமை.
- விற்றமின் குறைபாடுகள்.
- நிறை அதிகரிப்பால் ஏற்படும் நோய்கள்.
- தொற்று நோய்கள் அல்லாத நோய்கள்.

## இரவில் உணவு உட்கொள்ளாமல் இருக்க வேண்டாம்

இரவில் நாம் நித்திரைக்குச் சென்றவுடன் எமது உடலின் தேய்வடைந்த பாகங்கள் வளர்ச்சியடையத் தொடங்குகின்றன. இதன் காரணமாகத்தான் இரவுணவு உட்கொள்வது மிக அவசியமாகின்றது.



## காலை உணவும் அத்தியாவசியமானதே...



இரவு நித்திரைக்குச் சென்று தொடர்ந்து சுமார் 9 மணித்தியாலங்களுக்கு பட்டினியில் இருந்து காலையில் விழித்தெழுவதனால், காலை உணவு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. அவசியமின்றி பட்டினி இருக்கும்போது, உடல் வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கு அற்றுப்போகின்றது. இதனால் உடலில் நோய்த்தொற்றுக்கள் ஏற்படலாம். எனவே, தவறாமல் காலை உணவை உட்கொள்ள வேண்டும்.

## உண்ணாவிட்டால் ஏற்படும் மயக்கம்

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடலுக்குத் தேவையான க்ளுகோஸ் மட்டத்தைப் பேண வேண்டும். உடலுக்கு சக்தி கிடைப்பது க்ளுக்கோஸில் இருந்தாகும்.முறையாக உணவு உட்கொள்ளத்தவறினால் எமது உடலுக்கு கிடைக்க வேண்டிய க்ளுகோஸ் அளவு வீழ்ச்சியடைகின்றது. முறையாக உணவு உண்ணாவிட்டால் உடலில் இரத்த ஓட்டம் தடைப்பட்டு மயக்கம் ஏற்படுகின்றது.





## உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளாவிட்டால்...

உரிய நேரத்திற்கு உணவு உண்ணத்தவறினால் இரைப்பையில் அமிலத்தன்மை சுரக்கும் வீதம் அதிகரிக்கின்றது. இந்நிலை தொடரும் சந்தர்ப்பத்தில் இரைப்பையில் புண் ஏற்படுகின்றது. அமிலங்களின் அதிகரிப்பு காரணமாக, உணவு தொண்டைக்கு வருதல் (குமட்டல்), வயிற்றுவலி, தலைவலி போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படும். இதன் காரணமாகவே, அநேகமானோருக்கு Gastritis (கேஸ்ட்ரைடிஸ்) நோய் ஏற்படுகின்றது. அதனால், நாம் ஒவ்வொரு வேளை உணவையும் உரிய நேரத்திற்கு உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும். ஆக, இதன்மூலம் ஆரோக்கிய வாழ்வுக்கு உணவு எந்தளவுக்கு அவசியமாகின்றது என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

- அமீர் ஹுஸைசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (தமிழ்)

பெயர்: ............................................ நேரம்: 1 மணித்தியாலம்

01) பின்வரும் பந்தியை வாசிக்க

> ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 23 ஆம் திகதியை உலக புத்தக தினமாக அறிவித் துள்ளது. நமக்குத் தேவையானவற்றுள் முக்கியமானதொன்று புத்தகமாகும். நல்ல நூல்களே, உற்ற நண்பர்கள். மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும், வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்தி லிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. ஆனால், மனிதனின் வாழ்க்கை மட்டும்தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த தலைமுறை வாழ்க்கையைத் தொடங்குகிறது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வரலாறாக நூல்களில் பதிவுசெய்வதன் மூலமே அது சாத்தியமாகின்றது.

* ***இப்பந்தியைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (vi) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.***

i) உலக புத்தக தினத்தை பிரகடனப்படுத்திய நிறுவனம் எது? ..............................
ii) 'புத்தகங்கள்' என்பதன் ஒத்த சொல் தருக? ..............................
iii) இங்குள்ள உயர்திணைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று தருக? ..............................
iv) நல்ல நூல்கள் எதற்குச் சமனானவை என்று கூறப்படுகின்றது? ..............................
v) இங்கு குறிப்பிட்ட அடுக்கு மொழிச்சொல் ஒன்று தருக? ..............................
vi) பந்தியில் குறிப்பிட்ட பெயர் அடைமொழி ஒன்று தருக? ..............................

02) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

i) உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் .............................. வது உடம்புக்கு நல்லது
(உழவு, உளவு, உலவு)
ii) 'தந்தை தாய் ..............................' என்பது நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டி ஒரு முதுமொழியாகும்
(பேண், பேன்)

03) சரியான விடையைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

i) பூவிலிருந்து மணம் கமகம என்று வீசியது. கமகம என்பது ..............................
(இணைமொழி, இரட்டைக்கிளவி, அடைமொழி)
ii) ஏழை எளியவர்களுக்கு உதவுவது ஓர் உத்தம குணமாகும். இங்கு ஏழை எளியவர் என்பது; ..............................
(மரபுத்தொடர், இணைமொழி, உவமைத் தொடர்)
iii) பாலைப்போல நிலவு வானில் பவனி வருகிறது பாலைப்போல என்பது..............................
(மரபுத்தொடர், அடைமொழி, உவமைத்தொடர்)
vi) நாய் விரைவாய் ஓடியது விரைவாய் என்பது ..............................
(செயப்படுபொருள் அடைமொழி, பயனிலை அடைமொழி, எழுவாய் அடைமொழி)

04) தங்கம், கம்பம், காகம், கட்டம் என்ற சொற்களில் 'க' என்னும் எழுத்தில் காணப்படும் இயல்பொலி சொற்களை எழுதுக.

1. .............................. 2. ..............................

05) நூதனசாலை, சூரியன் என்ற இரு சொற்களிலும் நூ, சூ என்னும் எழுத்துக்களில் இடப் பட்டுள்ள உயிர்க் குறிகளின் பெயர்களை அடைப்புகளிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i) 'நூ' (கீழ்க்காலும் சுழியும் - மடக்கேறு - மடக்கேறும் அரவும்) ..............................
ii) சூ - (மடக்கேறு-கீழ்க்கால், கீழ்க்காலும் சுழியும்) ..............................

06) சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

i) 1. கலை நிகள்ச்சிகள் 2. களை நிகழ்ச்சிகள்
3. கலை நிகழ்ச்சிகள் 4. களை நிகல்ச்சிகள்
ii) 1. இனையத்தளம் 2. இணையத்தலம்
3. இணையத்தழம் 4. இணையத்தளம்

07) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

i) வயிற்றெரிச்சல் - ..............................
ii) முகம் மலர்தல் - ..............................

08) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

i) நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை - ..............................
ii) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா- ..............................

09) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

i) க்திரை .............................. ii) வகுப்புத் தலைவர் ..............................
iii) நூலகம் ..............................




10) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

i) Thank You - ..............................
ii) What is it ? - ..............................
iii) May i come in? -..............................

11) பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

i) ஒ(B)பே கம கொஹே(Dh)த? ..............................
ii) மட தோசே தென்ன ..............................

★ ***12 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ்க் கோடிடுக.***

12) பங்குனி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. ரம்புட்டான் 2. இறப்பர் 3. முள்முருக்கு 4. இலுப்பை

13)  இவ்வுருவில் உள்ள பூ எது?

1. அகத்திப் பூ 2. நீல அல்லி
3. கடதாசிப் பூ 4. கார்த்திகைப் பூ

14) ஔடத பானங்கள் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

1. கடதாசிப் பூ 2. எக்சோரா 3. பொன்னாவரைப் பூ 4. தாமரைப் பூ

15) வருடத்தின் எல்லாக் காலப்பகுதியிலும் பூக்கும் பூ எது?

1. இலுப்பைப் பூ 2. கார்த்திகைப் பூ 3. தாழம் பூ 4. லில்லிப் பூ

16)  இவ்வுருவில் உள்ள பூச்சி எது?

1. வண்ணத்துப் பூச்சி 2. அந்துப் பூச்சி
3. கும்பிடு பூச்சி 4. பச்சிலைப் பூச்சி

17) கூர்மையான கேட்டல் திறன் கொண்ட பிராணி எது?

1. கழுகு 2. புலி 3. நாய் 4. பருந்து

18) மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை எது?

1. கியூலொக்ஸ் 2. ஈஸ்டிஸ் இன பெண் நுளம்பு
3. அனோபிலஸ் பெண் நுளம்பு 4. அனோபிலஸ் ஆண் நுளம்பு

19) மழை நேரங்களில் மழையில் நனைய விரும்பும் பிராணி எது?

1. எருமை 2. சிங்கம் 3. ஆடு 4. முயல்

20) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலில் செய்ய வேண்டிய செயற்பாடு எது?

1. மனதைத் தளர்த்துதல் 2. உடலைத் தளர்த்துதல்
3. மனவுறுதி 4. பிரார்த்தனை

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

### வினாத்தாள் I இன் விடைகள்

***(6 ஆம், 13 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 11) | 3 | 21) | 2 | 31) | 1 |
| 02) | 3 | 12) | 3 | 22) | 1 | 32) | 2 |
| 03) | 1 | 13) | 2 | 23) | 3 | 33) | 2 |
| 04) | 2 | 14) | 3 | 24) | 2 | 34) | 3 |
| 05) | 3 | 15) | 1 | 25) | அவனது | 35) | 3 |
| 06) | 2 | 16) | 2 | 26) | வேதனைப்பட்டான் | 36) | பயறு |
| 07) | 1 | 17) | 1 | 27) | நிகழ்ச்சிகளைப் | 37) | சிலந்தி |
| 08) | 1 | 18) | 2 | 28) | தாங்க முடியவில்லை | 38) | 50 |
| 09) | 2 | 19) | 2 | 29) | 2 | 39) | 150 |
| 10) | 2 | 20) | 3 | 30) | 3 | 40) | 400 |

Digitized by Noolaham Foundation.

# பூமியைத் தாக்கவுள்ள சூரிய புயல்



எதிர்வரும் சில தினங்களில் சூரிய புயல் ஒன்று பூமியைத் தாக்கும் அபாயம் நிலவுவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இதனால் தொலைத்தொடர்பு சாதனங்கள் பாதிக்கப்படக்கூடிய அபாயம் நிலவுவதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், அது எப்போது நிகழும் என்று முன்னரே கூறிவிட முடியாது என்றும் சூரிய புயல் வீசுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னர்தான் அது பற்றிக் குறிப்பிட முடியும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு இந்த சூரிய புயல் பூமியைத் தாக்கினால், பூமி முழுவதும் மின்தடை ஏற்பட்டு கணினி வலையமைப்புக்கள், கைத்தொலைபேசிகள் உட்பட, அனைத்துத் தொலைதொடர்பு சாதனங்களும் ஸ்தம்பிதமடையும் என அவர்கள் கூறியுள்ளனர்.

இது குறித்து விஞ்ஞானிகள் மேலும் கூறுகையில்; "சூரியனில் இருந்து வெளிப்படும் அதிசக்தி வாய்ந்த வெப்பப் புயல் ஒரு மணி நேரத்துக்கு 16 லட்சத்து 9 ஆயிரத்து 344 கிலோமீற்றர் வேகத்தில் பூமியை



நோக்கி வீசலாம். எனினும், புயல் ஏற்படுவதை 30 நிமிடங்களுக்கு முன்புதான் துல்லியமாக கணிக்க முடியும்" என்றனர்.

இதுபோன்ற சூரிய புயல் 100 அல்லது 200 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஏற்படும் என்று லண்டனில் உள்ள இன்ஜினியரிங் ரோயல் எகடமி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 1989 ஆம் ஆண்டு இதுபோன்றதொரு சூரிய புயல் சிறிய அளவில் கெனடாவை தாக்கியது. அப்போது அங்கு மின்தடை ஏற்பட்டது. இலத்திரனியல் உள்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டன என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், இப்போதுள்ள அதிநவீன தொழில்நுட்பம் மூலம் சூரிய புயல் தாக்குதலின் தீவிரத்தைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக இங்கிலாந்து அரசு கூறியுள்ளது.

# கியூரியோசிடியின் கெமராவில் சிக்கிய மலர்

செவ்வாய் கிரகத்தின்மீது அங்கும் இங்கும் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளும் 'கியூரியோசிடி' விண்கலம், அண்மையில் செவ்வாய் கிரகம் தொடர்பான பல புதிய புகைப்படங்களை அனுப்பியிருந்தது. அவற்றில் மலரைப் போன்ற தோற்றமுடைய ஏதோ ஒரு பொருளின் படமும் அடங்கும். இது பூமியிலுள்ள நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


'யெலோக்னைஃப் பே' என விஞ்ஞானிகளால் பெயரிட்டு அழைக்கப்படுகின்ற செவ்வாய் கிரகத்தின் ஒரு பிரதேசத்திலேயே, இந்த மலர் போன்ற தோற்றமுடைய புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மலர் போன்ற தோற்றமுடைய இந்தப் பொருளானது,



விஞ்ஞானிகளை பெரு வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அப்பொருள் மர்மமானதொன்று என்றும் அது என்னவாக இருக்கும் என்று தம்மால் இதுவரை இனங்காண முடியவில்லை என்றும் நாஸா

கியூரியோசிடி விண்கலம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்குவதற்கு உதவிய ஒரு கலத்தில் இருந்து தூக்கியெறியப்பட்ட ப்ளாஸ்டிக் துண்டாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் ஊகிக்கின்றனர்.

# பொருத்தமான பாடத்தை தெரிவுசெய்வது அவசியம்



கல்வி கற்கும்போது, கற்றலுக்காக பொருத்தமான பாடங்களை மட்டும் தெரிவுசெய்து கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு பாடத்தை வற்புறுத்தலினாலோ அல்லது ஏனையவர்களுக்காகவோ அல்லது எந்தவித நோக்கமுமின்றியோ கற்கக் கூடாது. இதனால், எவ்வித பயனும் கிட்டப்போவதில்லை. மாறாக, அதனை முழுமையாக கற்பதற்கான விருப்பமும் குறைவாகவே காணப்படும்.

ஒவ்வொரு மாணவரும் வெவ்வேறான திறமைகளுடன் காணப்படுகின்றனர். அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான அறிவும் விருப்பமும் மாணவர்களிடையே வெவ்வேறாகக் காணப்படும். ஆகவே, தமது விருப்பத்திற்கேற்ப, திறமைக்கேற்பவே பாடங்களைத் தெரிவுசெய்து கற்க வேண்டும்.

நாம் தெரிவுசெய்யும் பாடங்களே, எதிர்காலத்தில் நாம் எந்த வேலையில், எந்த துறையில் செல்ல இருக்கின்றோம் என்பதை தீர்மானிக்கக் கூடியதாக இருக்கின்றன.எனவே, பாடத் தெரிவு என்பது எமது ஆற்றலுடன் ஒன்றித்து, உடன்பட்டுப் போகக்கூடியதாக இருக்க வேண்டும்.

எமக்கு விருப்பமான, பொருத்தமான பாடங்களை தெரிவுசெய்யும்போதுதான் அப்பாடத்தைக் கற்கவேண்டும், நல்ல பெறுபேறு எடுக்க வேண்டும் என்ற ஊக்கம் நம்மில் ஏற்படும். நமக்குப் பொருத்தமற்ற பாடங்களைக் கற்பதனால், நேரம் வீணாகக் கழிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட பாடம் தொடர்பில் விளங்காத் தன்மையும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, பாடத்தெரிவின் போது, நம்மால் கற்கக்கூடிய அதாவது நாம் கற்பதற்குப் பொருத்தமான, விரும்பும் பாடத்தை தெரிவுசெய்வதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.




எமது ஆற்றலுக்குப் பொருத்தமான பாடத்தைக் கற்பதனால் ஆற்றலை மேலும் விருத்தியடையச் செய்யவும் அப்பாடம் தொடர்பான அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளவும் முடியும்.

பொருத்தமான பாடத்தை தெரிவுசெய்து கற்கும்போது, அதனால் ஏற்படும் அறிவும் அநுபவமும் எமது வேலைகளை வினைத்திறனாக மேற்கொள்ள உதவி புரியும். ஆகவே, இன்றிலிருந்து எமக்கு உடன்பாடான பாடங்களைத் தெரிவுசெய்வதில் அதிக கவனம் செலுத்தி பொருத்தமான பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

எம்.ஏ.எஃப்.சப்ரானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக பாடநெறி 21


# தொடர்பாடல் அச்சுக்கலை...


(தொடர்ச்சி...)

சீனர்களினால் பல ஆண்டுகாலமாக, ரகசியமாகப் பேணப்பட்டு வந்த அச்சுக்கலை தொடர்பான விடயங்கள், அரேபிய வர்த்தகர்களினால் ஆசியாவுக்கும் பின்னர் ஐரோப்பாவுக்கும் கடத்தப்பட்டன. அந்தவகையில், சீனர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட அச்சுக்கலை குட்டன்பர்க்கினால் நவீன அச்சுக்கலை முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின் இன்றைய தகவல் உலகில் பல்வேறு நிலைப்பட்ட அச்சுக்கலை அபிவிருத்திகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.


அச்சுக்கலை விருத்தி ஊடாக, தொடர்பாடல் செயல் ஒழுங்கில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாயின. புத்தகங்களின் அச்சுப்பதிப்புக்கள் அதிகரித்தமையானது, குறித்த சமூக வகுப்பினருக்கு மட்டுமே உரியதாக காணப்பட்ட அறிவை அதாவது, தகவல்களை சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் நுகர்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியது. அத்துடன், வெகுசன ஊடகங்களில் ஒன்றான அச்சுக்கலை வளர்ச்சி நிலைகளுக்கும் காரணமாக அமைந்தது.

எழுத்தழுத்த அச்சிடல் முறைக்குப் பின்னர், தட்டச்சு முறை அறிமுகம் செய்யப்பட்டது. இவ் அச்சிடல் முறை ‘லித்தோகிரபி’ தட்டச்சு முறை (Litho graphy) என அழைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ‘ஓஃப்செற் லித்தோகிரபி’ அச்சுப்பதிப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது. எழுத்தழுத்த முறையில் பூச்சுடனான ஈய எழுத்துக்கள் கடதாசி மீது அழுத்தப்படுவதையும், லித்தோகிரபி முறையில் பூச்சுடனான அச்சுத்தகடு கடதாசி மீது ஒற்றியெடுக்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. ஓஃப்செற் லித்தோகிரபி முறையில் எந்தவொரு நிறத்தையும் அடிப்படை நிறங்கள் நான்கிற்கும் பிரித்து அச்சிடும் வண்ணக்கோட்பாட்டு தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுகின்றது. சாதாரண அச்சிடல் செயற்பாட்டில் நான்கு வர்ணங்களும் தனித்தனித் தடவையாக அச்சிடப்பட்டாலும், செய்தித்தாள் அச்சிடலில் நான்கு அச்சுத்தகடுகளினாலும் ஒரே தடவையில் அச்சிடக்கூடிய அதிநவீன அச்சுக்கலை இயந்திர நுட்பங்கள் தற்போது உருவாகியுள்ளன.




தற்போது நவீன அச்சுக்கலை இயந்திரங்களின் செயற்பாடுகள் ‘டிஜிட்டல்’ முறைமையுடன் தொடர்புபட்டமைவதை அவதானிக்க முடிகின்றது. குறுகிய நேரத்தில் அதிக எண்ணிக்கையைப் பெறவும், அழகிய வர்ணங்களை தரமான வகையில் அச்சுப்பதிக்கின்ற அதிநவீன இயந்திரங்கள் தற்போது அறிமுகமாகியுள்ளன.





(தொடரும்)


**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தளிர்கரம்

வழங்குபவர்: ஆசிரியை றோஸ்மலர்




இங்கு காணப்படும் பெட்டியில் உள்ள கட்டங்களில் வரையப்பட்டுள்ள உருவத்தின் மறுபாதியை இதேபோன்று வரைந்து, வெளிப்படும் உருவை அறிக.



மூன்று கூடைகளுக்கு மாத்திரம் நிறந்தீட்டுக.

இங்குள்ள பொருட்களில் இவற்றுக்கு தொடர்பில்லாத ஒன்றும் உள்ளது. அது என்ன என்பதைக் கண்டறிந்து வட்டமிடுங்கள்.



பொருத்தமான படங்களுடன் இணைக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படங்களைப் பார்த்து ரசிக்க 'Picsho'




இணையத்தில் புகைப் படங்களை வெளியிடுவதும் பகிர்ந்துகொள்வதும் சுலபமாகி இருக்கும் நிலையில், அப்புகைப்படங்களைப் பார்த்து ரசிப்பதற்கான வழியும் மேம்பட வேண்டியது அவசியமாகும். இதற்கு அழகான உதாரணமாக, 'பிக்ஷோ' இணையத்தளத்தைக் குறிப்பிடலாம்.

பிக்ஷோ தளம் ஆனது, இணையத்தில் வெளியாகும் புகைப்படங்களில் இருந்து தேவையான படங்களை புகைப்படத் தொகுப்பாக உருவாக்கிக்கொள்ள வழி செய்கிறது. அதாவது, பரிபாஷையான hashtag அடிப்படையிலேயே, புகைப்படத் தொகுப்பை உருவாக்கிகொள்ள இத்தளம் உதவுகிறது. 'hashtag' என்பது பகிரப்படும் தகவல் அல்லது புகைப்படத்தின் பொதுத்தன்மையை உணர்த்தி, அவற்றை அடையாளப்படுத்தும் குறிச்சொற்களாகும். அந்தவகையில், பிக்ஷோ தளம் இத்தகைய hashtag களை அடிப்படையாகக் கொண்ட புகைப்படங்களை பல்வேறு சேவைகளில் இருந்து உருவி தொகுத்தளிக்கிறது.

picsho.com
Create photo galleries from social #hashtags

ஃபேஸ்புக், டுவிட்டர், ஃப்லிக்கர், இன்ஸ்டாக்ரேம் ஆகிய சேவைகளில் பகிரப்படும் புகைப்படங்களில் இருந்து இணையவாசிகளின் விருப்பத்திற்கு ஏற்ற புகைப்படங்களை தெரிவுசெய்து, அவற்றைத் தொகுப்பாக மாற்றிக்கொள்ள உதவுகின்றது.

அதன்படி, இணையத்தின் இப்போதைய

இணையவாசிகள் எந்த வகையான புகைப்படங்களைப் பார்த்து ரசிக்க விரும்புகின்றனரோ, அதற்கான hashtag ஐ டைப் செய்தால், அந்த அடையாள சொல் கொண்ட படங்களை எல்லாம் தொகுப்பாகப் பார்த்து ரசிக்கலாம்.




தொகுப்பை உருவாக்க முயலும்போது, எந்த சேவைகளில் இருந்து படங்கள் தேவை என்று குறிப்பிடும் வசதியும் இருக்கிறது. அதேபோல, தொகுப்பில் உள்ள படங்களில் விருப்பமில்லா படங்களை நீக்கிக்கொள்ளும் வசதியும் இருக்கிறது. இந்த தொகுப்புகளை அப்படியே சேமித்து வைத்துக்கொள்ளலாம் என்பதோடு, ஃபேஸ்புக், டுவிட்டர் வழியே நண்பர்களோடு பகிர்ந்தும்கொள்ளலாம். இதற்கான இணையத்தள முகவரி http://picsho.com/ என்பதாகும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.






# கண்ணசைவினால் கணினிகளை இயக்கிடலாம்..!




கண்ணசைவின்மூலம் கணினிகளை இயக்கக்கூடிய புத்தம் புதிய சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'Tobii REX' எனப்படும் இந்த புதிய இலத்திரனியல் சாதனம், USB இணைப்பு மூலம் செயற்படக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மைக்ரோசொஃப்ட் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட விண்டோஸ் 8 இயங்குதளங்களில் செயற்படக்கூடியவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



அதாவது, இதன் ஸ்கேனர் கண்ணின் கருவிழியின் அசைவுகளை வைத்து கட்டளைகளை கணினிக்கு அனுப்புகிறது. அதனடிப்படையிலேயே கணினிகள் இயங்கும்.






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# Delete செய்ய முடியாத Files மற்றும் Folder களை Delete செய்வது எப்படி?

சில சமயங்களில் கணினியில் குறிப்பிட்ட Folder அல்லது File போன்றவற்றை Delete செய்யும்போது, 'Access Denied' (படம் 1) என்று வரும். இதன்போது Delete செய்யவும் இயலாது. இவ்வாறு ஏன் வருகின்றது என்பதையும், அவ்வாறு வந்தால் அவற்றை உடனடியாக Delete செய்ய என்ன வழி இருக்கிறது என்றும் சற்று நோக்குவோம்.



படம் 1


இதற்கு உதவும் Software தான் 'Unlocker'. இது Delete மட்டும் அன்றி Rename, Move போன்ற வசதிகளையும் நமக்கு வழங்குகின்றது. இதன்மூலம் பின்னணியில் இயங்கிக்கொண்டிருக்கும் File அல்லது Folder இன் இயக்கத்தை நிறுத்தி, அவற்றை Delete செய்ய முடியும்.



படம் 2

இந்த Software ஐ Download செய்து கணினியில் install செய்துகொள்ளுங்கள். பின்னர் எந்த File அல்லது Folder ஐ Delete செய்ய முடியவில்லையோ அதன்மீது Right Click செய்து 'Unlocker' என்பதை Click செய்யவும். (பார்க்க படம் 2)

இதன்பின்னர் புதிய Window ஒன்று தோன்றி என்ன செய்ய வேண்டும்? என்று கேட்கும். அதில் 'Kill Process' என்று கொடுத்தால்,



படம் 3

இயங்கிக்கொண்டிருக்கும் அதன் செயல் நின்றுவிடும். இதன்மூலம் நீங்கள் Delete செய்துவிட முடியும். இல்லை என்றால் 'Unlock All' என்பதை தெரிவுசெய்து பின்னர் Delete செய்ய முடியும். ஆனால் அந்த File அல்லது Folder எங்கேயும் இயங்கவில்லை என்றால், படம் 3 இல் உள்ளது போல ஒரு சிறிய விண்டோ வரும். அதில் Delete என்பதை தெரிவுசெய்தால் போதும்.

இப்போது சில வினாடிகளில் அந்த File அல்லது Folder Delete ஆகிவிடுவதை நீங்கள் அவதானிக்கலாம்.

## சிந்தனை மொழி

*இனிய சொற்கள் இருக்கும்போது கடிய சொற்களை உபயோகப்படுத்துவது, கனி இருக்கும்போது காயை உண்ணுவது போன்றதாகும்*

திருவள்ளுவர்





# bing தேடுபொறியில் சமூகதளங்களை தேடுவதற்கான வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது




மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட bing தேடுபொறியில் சமூக வலைத்தளங்களை தேடுவதற்கான வசதி மேம்படுத்தப்பட்டுள்ளதாக ம்மக்ரோசொஃப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் பயனர்கள் தமது நண்பர்களின் ஃபேஸ்புக் தகவல்களான Status updates, Shared links, Comments மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றை முன்னரைவிடவும் 5 மடங்கு வேகத்துடன் தேடிப்பெற்றுக்கொள்ள முடியும்




என மைக்ரோசொஃப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. இம்மேம்படுத்தலானது, பயனர்களுக்கு இலகுவான இடைமுகத்தினை கொடுப்பதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# விண்டோஸ் இயங்குதளத்தினைக்கொண்ட கணினிகளின் வேகத்தை அதிகரிப்பதற்கு...

அதிகளவான கணினிப் பாவனையாளர்களால் விண்டோஸ் இயங்குதளமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால், அன்றாடம் இந்த இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மென்பொருட்கள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக தற்போது விண்டோஸ் இயங்குதளத்தினைக்கொண்ட கணினிகளின் செயற்பாட்டு வேகத்தினை பாதுகாப்பதுடன், வேகம் குறைந்த கணினிகளின் செயற்பாட்டை அதிகரிப்பதற்கும் என 'Avira System SpeedUp' எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.




அனைத்து வகையான விண்டோஸ் இயங்குதளங்களிலும் செயற்படக்கூடிய இம்மென்பொருளானது, விண்டோஸ் இயங்குதளத்தின் பின்னணியில் செயற்பட்டு வரும் கோளாறுகளைச் சுட்டிக்காட்டுவதுடன், அவற்றை தானாகவே சரிசெய்யக் கூடியதாகவும் காணப்படுகின்றது.




Avira System Speedup

HOME ONLINE


மேலும் தேவையற்ற கோப்புக்கள், குக்கீஸ் போன்றவற்றினையும் நீக்குகின்றது.

இவை தவிர File Encryption, Startup Manager, Smart Defragmenter, Disk Analyzer, Uninstaller போன்ற வசதிகளையும் இம்மென்பொருள் உள்ளடக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இங்கே வெட்டவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் கணினியைப் பயன்படுத்தும் போதெல்லாம் Function Key களைப் பார்த்திருப்போம். எனவே, இங்கு Function key கள் ஏன் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

**F1:** இது பெரும்பாலும் எல்லா Program களிலும் help screen ஐ open செய்யப் பயன்படுகிறது. Windows key மற்றும் F1 key ஐ அழுத்துவதன்மூலம் Help Screen ஐ open செய்ய முடியும்.

பயன்படுகிறது. (உதாரணமாக: Ms-word இல் ஒரு line ஐ தொடர்ந்து paste செய்ய இதுவோர் எளிதான வழியாகும்).

* Alt+F4 - அனைத்து Program களையும் close செய்ய உதவுகிறது.

* அத்துடன் Ctrl +F4 ஆனது, தற்போது open செய்திருக்கும் program ஐ close செய்யப் பயன்படுகிறது.

**F5:** * Reload or Refresh செய்ய.

* MS Word இல் Open the find, Replace and go to window போன்ற செயற்பாடுகளுக்கு உதவுகிறது.

# Function Key கள் எதற்காகப் பயன்படுகின்றன?

**F2:** இது Highlight செய்யப்பட்ட File அல்லது Folder அல்லது icon இற்கு Rename செய்யப்பயன்படுகிறது.

**Microsoft word இல் இதன் பயன்கள்:**

* Alt+Ctrl+F2 - புதிய File ஒன்றை open செய்வதற்கு உதவுகிறது.

* Ctrl+F2 - print preview window வை open செய்வதற்கு உதவும்.

**F3:** இது ஏராளமான program களில் Search Option ஐ open செய்யப் பயன்படுகிறது.

* Ms-Dos இல் கடைசி வரியை Repeat செய்யப் பயன்படுகிறது.

* Ms-word இல் upper case இல் இருந்து lower case இற்கு வார்த்தை முழுவதையும் மாற்றப் பயன்படுகிறது.

**F4:** * Find window ஐ open செய்ய (check in my computer)

* கடைசியாக நடந்த Action ஐ Repeat செய்யப்




* Power point இல் slide show start செய்ய.

**F6:** * firefox, Internet Explorer இல் cursor ஐ address bar இற்கு மாற்றும்.

* Ctrl+Shift+F6 ஆகிய key களை அழுத்துவதனூடாக புதிய Ms word Document ஐ open செய்யலாம்.

**F7:** * Microsoft இல் spell check & Grammer check செய்யப் பயன்படும்.

* Mozilla வில் caret browsing ஐ on செய்யப் பயன்படும்.



**F8:** இது Windows start ஆகும்போது, safe mode access செய்யப் பயன்படும்.

**F9:** Quark 5.0 வில் Measurement toolbar ஐ open செய்யப் பயன்படும்.

**F10:** * இது Microsoft word இல் menu bar ஐ open செய்யப் பயன்படுகிறது.

* Shift+F10 ஆகியவை Right Click ஆக செயற்படும்.

**F11:** Internet Browser களில் Full Screen இற்கு செல்ல உதவும்.

**F12:** * Ms word இல் save as menu வை open செய்யப் பயன்படும்.

* Shift+F12 களை அழுத்துவதனூடாக Ms Word இல் save செய்யப் பயன்படும்.

* Ctrl+Shift+F12 களை அழுத்துவதனூடாக Ms word இல் Print செய்யப் பயன்படும்.






# உதவிக்கு ஒரு தளம்

## Help the world



Lost Black & White Male Cat



Lost Boston Terrier

Bruno Ligutti under Find lost pets in Montgomery, Texas, United States

Bruno Ligutti under Fin in Willis, Texas, United

உதவி தேவைப்படுபவர்களையும் உதவிடத் தயாராக இருப்பவர்களையும் இணைத்து வைக்கும் பாலமாகவே chain.ly தளம் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் நேரடியாக உதவ வேண்டும் என்றில்லை; உதவக்கூடியவர்களை பரிந்துரைத்தால் போதுமானது.

ஃபேஸ்புக், கூகிள் உள்ளிட்ட வலைப்பின்னல் சேவைகள் மூலமாக, பகிர்தல் ஒரு பழக்கமாக உருவெடுத்துள்ள நிலையில், அந்த பகிர்தலின்மூலம் உதவிகளை பெறுவதற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலான ஒரு தளமாகவே chain.ly அமைந்துள்ளது.

உதவி தேவைப்படுபவர்கள், மற்றவர்கள் தங்களுக்கு எப்படி உதவ முடியும் என்பதை விளக்கி அதனை கோரிக்கையாக இந்த தளத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.இவ்வாறு உதவி கோருவதற்காக என்று அழகான இணையப் படிவமும் இருக்கிறது. இத்தளத்தில் 'create' என்ற பகுதியில் க்ளிக் செய்தால், இந்த படிவம் வருகிறது. அதில் உங்களுக்கு என்ன உதவி தேவை என்பதை தலைப்பு போலக் குறிப்பிட்டு, பின்னர் உதவி தேவைப்படுவதற்கான விரிவான விளக்கத்தை அளித்து, பொருத்தமான புகைப்படத்தை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். இப்படி உருவான உதவி கோரும் பக்கத்தை உங்கள் இணைய நட்பு வட்டாரத்தில் பகிர்ந்துகொள்ளலாம். ஃபேஸ்புக், கூகிள், டுவிட்டர், பின்ட்ரெஸ்ட், லின்க்டுஇன் ஆகிய வலைப்பின்னல்கள் வாயிலாக இந்த கோரிக்கையை பகிர்ந்துகொள்ளலாம்.

இதனைப் பெறும் நண்பர்கள் தங்களால்




முடியும் என்றால் உதவ முன்வரலாம். உதவத் தயாராக இருப்பவர்கள் நேரிடையாகப் பதில் அளித்து தொடர்புகொள்ளலாம். உதவ முடியவில்லையாயின், இந்த கோரிக்கையை அப்படியே அவர்களின் இணைய நட்பு வட்டத்தில் பகிர்ந்துகொள்ளலாம்.

இப்படி உதவிக்கான சங்கிலியை உருவாக்கிக் கொண்டு போவதன்மூலம், உதவி கிடைப்பதற்கான சாத்தியம் உண்டாகிறது. இதற்கான இணையத்தள முகவரி http://chain.ly/ என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டிப் பிரியர்களுக்காக....




குறுக்கெழுத்துப் போட்டி என்றாலே ஏராளமானோர் கையில் பேனாவுடன் அதில் மூழ்கி விடுவர். இவ்வளவு ஆர்வமுள்ளவர்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகளை வழங்கக்கூடிய இணையத் தளங்கள் அறிமுகமாகியுள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலவச குறுக்கெழுத்துப் போட்டிகளின் இருப்பிடமாக இந்த தளங்கள் விளங்குகின்றன. அத்துடன், இவற்றில் தினமும் புதுப்புது குறுக்கெழுத்துப் போட்டிகள் சேர்க்கப்பட்டு வருகின்றன. எனவே, குறுக்கெழுத்துப் பிரியர்கள் இந்த தளங்களில் எப்போது வேண்டுமானாலும் குறுக்கெழுத்து புதிர்களை விளையாடி மகிழலாம்.


கணினியில் அன்றி பேனாவினால் குறுக்கெழுத்துப் போட்டிகளை விடுவிக்க விரும்புபவர்கள் போட்டியை தெரிவு செய்து அச்சிட்டுக்கொள்ளும் வசதியும் இருக்கிறது.







விரும்பிய வடிவமைப்பில் அச்சிட்டுக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. குறுக்கெழுத்துப் போட்டியை தீர்க்கும் போது, ஏதேனும் ஒன்றுக்கு விடைகாண முடியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கென்று வழிகாட்டிப்பகுதியும் இங்கு உள்ளது. அத்துடன், ஏற்கனவே எழுதப்பட்ட போட்டிகளுக்கான விடைகளையும் இங்கு சரிபார்த்துக்கொள்ளலாம்.

ஆங்கில மொழியிலும் தமிழ்மொழியிலுமான குறுக்கெழுத்துப் போட்டிகளை விளையாடி மகிழ்ந்திட http://www.onlinecrosswords.net/, http://www.tamilpuzzles.com, http://www.puthirmayam.com/index.php, http://www.sparthasarathy.com/crosswords/indexcw_tamil.html ஆகிய தளங்களை நாடலாம்.








# நாம் அனுப்பிய மின்னஞ்சல் படிக்கப்பட்டுவிட்டதா?

நாம் ஒருவருக்கு அனுப்பிய மின்னஞ்சலை குறித்த நபர் Open செய்து படித்துவிட்டாரா? இல்லையா? என்பதை எளிதாக அறிந்துகொள்ள Right Inbox என்ற Application உதவி புரிகிறது. Gmail பயனாளர்களுக்கு மட்டுமே அறிமுகமாகியுள்ள இந்த வசதியை Google Chrome, Firefox, Safari உலாவிகளில் பயன்படுத்த முடியும்.

1. முதலில் Right Inbox தளத்திற்கு சென்று 'Install now' என்பதை Click செய்யுங்கள்.

2. அடுத்து வரும் பக்கத்தில் உங்கள் உலாவிக்கு ஏற்றது போன்று, தரவிறக்கம் செய்துகொள்ளவும்.

3. தற்போது உங்கள் உலாவியில் Extension ஆக இது Add ஆகிவிடும். ஒருமுறை உங்கள் Browser ஐ Close செய்து Open செய்யுங்கள். அல்லது Gmail ஐ Refresh செய்யுங்கள்.

4. இப்போது உங்கள் Gmail இல் 'Right Inbox is Ready' என்று வருவதை Continue கொடுங்கள்.

5. அடுத்த பக்கத்தின் Grand Access என்பதை நீங்கள் Click செய்ய வேண்டும்.

இங்கே Grand Access கொடுப்பதால் உங்கள் Password போன்ற தனிப்பட்ட தகவல்களை அவர்களால் Access செய்ய முடியாது.

6. இப்போது மின்னஞ்சல் ஒன்றை Compose செய்யுங்கள். அதில் சில புதிய வசதிகள் இருப்பதைக் காணலாம். அதில் Track தான் நாம் பயன்படுத்தப்போகும் வசதி.

அதற்கமைய, மின்னஞ்சலை நாம் Compose செய்யும்போது Track என்பதை Click செய்து அனுப்பவும்.

7. இதன்பின் மின்னஞ்சலை குறித்த நபர் Open செய்ததும், உங்களுக்கு ஒரு செய்தி வரும். அதன்மூலம் குறித்த நபர் நீங்கள் அனுப்பிய மின்னஞ்சலைப் படித்துவிட்டாரா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 4984
நா.பிரணவி, அம்பாள்குளம், கிளிநொச்சி.


அங். இல: 4985
ஹாபிஸ், மாளிகாகந்த வீதி, கொழும்பு-10,


அங். இல: 4986
பா.பாலோஜன், உப தபாலகம், ஆழியவளை.


அங். இல: 4987
எம்.ஆர்.சப்ரான், கண்டி வீதி, திஹாரிய.


அங். இல: 4988
சரா மர்யம் அஷ்பாக், சரணங்கர வீதி, தெஹிவளை.


அங். இல: 4989
பாத்திமா ருகையா, கிரேன்ட்பாஸ், கொழும்பு-14.


அங். இல: 4990
பா.திவ்வியணன், கூமாங்குளம், வவுனியா.


அங். இல: 4991
க.இந்துசா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.


அங். இல: 4992
என்.நாஸிக் ரஹ்மான், நீரெல்லை, அக்குறனை.


அங். இல: 4993
இரா.புகழினி, விநாயகபுரம், துணுக்காய்.


அங். இல: 4994
எம்.அஃஹ்சான், செட்டியார் வீதி, மருதமுனை.


அங். இல: 4995
யோ.விதுஷன், உடுவில் கிழக்கு, சுன்னாகம்.


# சமூக வளர்ச்சி எனப்படுவது யாது?

தமது சமூக மரபின் தன்மையை உணர்ந்து அதற்கேற்றவாறு தனது நடத்தையை உருவாக்கிக்கொள்ள திட்டமிட்ட முறையில் செயலாற்றுவது 'சமூக வளர்ச்சி' எனப்படும். சமூக வளர்ச்சியுடன் இணைந்து தனித்தன்மையும் (Individuality), தற்கருத்தும் (Self Concept) வளர்ச்சியுறுகின்றன. சமூகத்தில் எம்மைப் பற்றிய பிறரது கருத்துக்கள் இவற்றின் வளர்ச்சியில் முதன்மையான செல்வாக்குப் பெற்றவை என்பதனை மனவியலறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்துடன், சமூகக் கட்டுப்பாடுடன் அமைந்த நடத்தை, நல்லொழுக்க நடத்தை ஆகியவற்றின் வளர்ச்சியும் சமூக வளர்ச்சியுடன் இணைந்தும் அதன் செல்வாக்கிற்குட்பட்டும் எழுகின்றது. முன்னர் குறிப்பிட்டபடி, சமூக வளர்ச்சி அறிவு வளர்ச்சியுடனும் தொடர்புடையது. ஏனெனில், சமூகவியல்பு பெறுதலில் (Socialization) சமூகம் பற்றிய உணர்வு சமூகத்தொடர்களில் மகிழ்ச்சி கொள்ளுதல், சமூக பொறுப்புக்களை ஏற்றல், சமூக நலனுக்காக தன்னை உட்படுத்தல் போன்றன காணப்படுகின்றன.



ஒரு குழந்தையானது, தனது அறிவின் அடிப்படையில் சிந்தித்து, தனது தேவைகள் குழுத்தேவைகளுடன் தொடர்புள்ளவை என்பதை உணரும்போதும் சமூக செல்வாக்குகள் இன்றி தனது வளர்ச்சிக்குத் தேவையான ஏற்பு, பாராட்டு, குழு உறுப்பினராக இருத்தல் போன்றன நிறைவு பெற மாட்டா என்பதனை உணரும்போதுமே சமூக வளர்ச்சியில் அது ஆர்வம் காட்டுகின்றது.

சமூக வளர்ச்சி தொடர்ச்சியாகவும் மெதுவாகவும் நிகழ்கின்றது. இதில் சமூகவியல்பு பெறுதல், தனித்தன்மை வளர்ச்சி ஆகிய இரண்டும் இணைந்து எழுகின்றன. தனது சமுதாயத்தின் கட்டுப்பாட்டு விதிகள், மதிப்புகள், நடத்தைத் தராதரங்கள் போன்றவற்றை குழந்தை தனது மனதுள் உள்வாங்குவது சமூகவியல்பு பெறுதலாகும். தனித்தன்மை வளர்ச்சி எனப்படுவது தனது சிறப்புப் பண்புகள், தேவைகள் ஆகியவற்றினை விட்டுக்கொடுக்காமல் காப்பாற்றவும் இதேபோன்று, சமூக ஏற்பினைப் பெற சிலவற்றை மட்டுப்படுத்திக் கொள்ளவும் மேற்கொள்ளப்படும் விளைவாகும்.




**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

**SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?**

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள, REG இடைவெளி TOP என Type செய்து 77000 எனும் இலக்கத்திற்கு **SMS** அனுப்பவும்.

# தெரிந்து கொள்வோம்

* **இலங்கையில் இறப்பர் பயிர்ச் செய்கை யாரால் எப்போது எங்கு ஆரம்பிக்கப்பட்டது?**
  கம்பளை சிங்ஹபிடிய என்ற இடத்தில் 1822 இல் ஜோர்ஜ் பேர்டினன் என்பவரால்
* **டீசல் மூலம் இயங்கும் மோட்டார் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?**



  ருடோல்ஃப் டீசல்(Rudolph Diesel) 1832 இல் ஐக்கிய அமெரிக்காவில்
* **இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டமாகும். அதேபோன்று இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தேசிய விளையாட்டுகள் எவை?**
  இந்தியா - ஹொக்கி
  பாகிஸ்தான் - ஹொக்கி
  அவுஸ்திரேலியா - கிரிக்கெட்
* **அவுஸ்திரேலியாவையும் தஸ்மேனியாவையும்பிரிக்கும் நீரிணை எது?**



  பாஸ் நீரிணை
* **1521 இல் கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டது. அப்பிரிவுகள் எவை? அவற்றின் அரசர்கள் யார்?**
  1. கோட்டை - புவனேகபாகு
  2. ரைகம - ரைகம் பண்டார
  3. சீதாவாக்கை - மாயதுன்னை
* **இலங்கையின் முதலாவது ஆள்பதி நாயகம் யார்?**
  சேர்.ஹென்றி மொன்க் மேசன்மூர்
* **கிட்டப்பார்வை (Mypoia) உள்ளவர்கள் எத்தகைய கண்ணாடியைப் பயன்படுத்த வேண்டும்?**
  குழிவு வில்லை

**உடுவை பரந்தாமன்**

படத்தை இங்கே ஒட்டவும்



**விஜய் மாணவர் கழகம்**

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
பாடசாலை: ..............................
வகுப்பு: ..............................
திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்ட மன்னன்

கொழும்பிலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் புறப்பட்ட இரு படை அணிகள் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஒன்றிணைந்து கண்டி மாநகருக்குள் ஆவேசமாகப் பிரவேசித்தன.

இதற்கிடையில் மன்னனும் பிரதானிகளும் மக்களும் மாளிகையின்கீழ் இருந்த தேவாலயங்களுக்கு தீ மூட்டிவிட்டு, கண்டியிலிருந்து பின்வாங்கிச் சென்றனர். இதனால், ஆங்கிலப் படையினர் நகரை முழுமையாக தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். நகரம் கைப்பற்றப்பட்டமையால், கொழும்புடன் தகவல் பரிமாற்று வசதிகளை மேற்கொள்ள பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்காக, தம்பதெனியவில் ஒரு கோட்டையைக் கட்டினர். மாத்தளை-திருகோணமலை வீதியில் கோனியாவில எனும் இடத்திலும் மற்றுமொரு பலம் வாய்ந்த கோட்டை கட்டியெழுப்பப்பட்டது. இது 'மெக்டோவல் கோட்டை' என்று அழைக்கப்பட்டது.

இதேவேளை, கண்டி லெவிகே திசாவை நாட்டின் எல்லைப்பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொள்ள முயற்சித்தான். அவர்களை ஆங்கிலப் படையினர் விரட்டி அடித்தனர். கொழும்பிலுள்ள ஆங்கில ஆள்பதியின் பாதுகாப்பின்கீழ் கண்டி அரச முடிக்கு இரண்டு உரித்துடையவர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரை அரசனாக்குவது குறித்து ஆள்பதி சிந்தித்தார். இவ்வாறு அரசனாவதற்கு உரிமை கோரியவர்கள் முத்துசாமி மற்றும் கந்தசாமி ஆகியோராவார். அவர்கள் இருவரும் கண்டிக்கு அழைக்கப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற முன்னாள் கண்டி இராச்சிய பிரதானி, இவ்விருவரையும் கைது செய்வதற்கு முயற்சித்தான். எனினும், ஆங்கிலேயரின் விரைவான செயற்பாடுகள் காரணமாக, பிரதானிகள் பின்வாங்க நேர்ந்தது. ஆங்கிலேயர் முத்துசாமியை கண்டி அரசனாக்கி அவனுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள்



உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
உறங்க இடமின்றி
உள்ளத்தில் நிம்மதியின்றி
சொந்தங்கள் யாருமின்றி
அதிகள் என்ற பெயர் பெற்று
நடுத் தெருவில் நாமிருக்க!
பறவைகள் கூடு செல்ல
சூரியனும் மறைந்து செல்ல
இருள் சூழ
நாம் இருப்பதோ நடுத்தெருவில்
எம் பெயரோ அகதிகள்!

இல்ஸா மனாப்,
கு/பறகஹதெனிய தே.பா...,
பறகஹதெனிய.

# புத்திசாலிப் பொய்யன்



ஒரு நாட்டின் அரசன், நம்பக் கூடிய சிறந்த பொய்யைச் சொல்லும் ஒருவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாகக் கொடுக்கப் படும் என்று அறிவித் தான். நாட்டில் பல பகுதிகளி லிருந்தும் பலர் வந்து பல பொய் களைச் சொல்லிப் பார்த்தனர். ஆனால், அரச னுக்கு எதிலுமே திருப்தி ஏற்பட வில்லை.

ஒருநாள் கந்தல் உடை அணிந்த ஏழை ஒருவன் அரச சபைக்கு வந்தான். அப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவதா கக் கூறினான். அரைகுறை மனது டன் அரசர் சம்மதம் தெரிவித்தார். அந்த ஏழை சொன்னான், "அரசே ஞாபகமி ருக்கிறதா? நீங்கள் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் தரவேண் டியிருக்கிறது. அதை வாங்கத்தான் வந்தேன்" என்றான். அரசனிற்கு கோபம் வந்தது. "நீ பொய் சொல்கிறாய். நானாவது உனக்குப் பணம் தரவேண்டியி ருப்பதாவது?" என்று கோபத்தில் கத்தினார். உடனே ஏழை சொன்னான், "அரசே, நீங்களே ஒத்துக்கொண்டுவிட் டீர்கள். நான் பொய் சொன்னேன் என்று. எனவே போட்டி விதியின்படி எனக்கு ஆயிரம் பொற்காசுகள் கொடுங் கள்" என்றான். தான் அவசரத் தில் உளறியதை அப்போதுதான் உணர்ந்தார் அரசர். உடனே அவர், "இல்லை, இல்லை நீ பொய் சொல்லவில்லை" என்று அவசரமாக மறுத்தார். ஏழை சொன்னான், "நல்லது அரசே, நான் உண்மையைத் தான் சொன்னேன் என்றால் எனக்குத் தர வேண்டிய ஆயிரம் பொற்காசு களைக் கொடுங்கள்" என்றான் சமயோ சிதமாக. அரசர் அந்த ஏழையை சிறந்த பொய்யன் என்று ஏற்று ஆயிரம் பொற் காசுகளை வழங்கினார்.

வி.பிருந்தாபன்,
கமு/சிவசக்தி வித்.,
நற்பிட்டிமுனை.




# புதிய பெயர் சூட்டிக்கொண்ட நாடுகளும் நகரங்களும்

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| கம்பூச்சியா | கம்போடியா |
| பேர்ஷியா | ஈரான் |
| கோல்ட்கொஸ்ட் | கானா |
| பர்மா | மியன்மார் |
| கொங்கோ | ஸாயிர் |
| சயாம் | தாய்லாந்து |
| சிலோன் | இலங்கை |
| எகிப்து | ஐக்கிய அரபு குடியரசு |
| மலாயா | மலேசியா |
| நிப்போன் | ஜப்பான் |
| கல்கத்தா | கொல்கத்தா |
| கொன்ஸ்தாந்திநோபிள் | இஸ்தான்புல் |
| பெடரோகிராட் | லெனின் கிராட் |
| சவிஸ் பரி | ஹாரே |
| மெட்ராஸ் | சென்னை |
| ரங்கூன் | யான்கோன் |
| கிறிஸ்டினா | ஒஸ்லோ |
| புத்தேவியா | ஜகார்த்தா |
| அங்கோரா | அங்காரா |

ஆர்.எப்.றைஹானா, கெப்படிய மு.ம.வித்., கலேவெல.

## அறிந்ததில் சில...



1. சூரியனின் மேற்பரப்பு வெப்பம் 6000°C ஆகும்.
2. சூரியனின் உட்புற வெப்பம் 15 மில்லியன் °C ஆகும்.
3. சூரியனின் ஒளிக்கதிர்கள் புவியை வந்தடைவதற்கு 8 நிமிடமும் 18 செக்கன்களும் எடுக்கின்றது.
4. கோள்களுக்கு தன்னொளி கிடையாது. இது சூரியனின் ஒளியைப் பெற்று தெறிப்படைகின்றன.

த.ஷாருஜா,
குருமண்வெளி.

# எனது பொழுதுபோக்கு

எனது பொழுதுபோக்கு வாசிப்பாகும். பத்திரிகைகள், கதைப்புத்தகங்கள் போன்றவற்றை நான் விரும்பி வாசிப்பேன். அத்துடன், சிறுவர் சஞ்சிகைகள், பாடல்கள், சிறுவர் ஆக்கங்கள் என்பவற்றையும் விரும்பி வாசிப்பேன். பஞ்சத்தந்திரக் கதைகள், நீதிக்கதைகள், பீர்பால் கதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர்கள் அறிய வேண்டிய விஞ்ஞானிகள் போன்ற நூல்களையும் வாசிப்பேன்.

இவ்வாறு நான் வாசிப்பதால் அதிகமான விடயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது. அவற்றைப்போல என்னாலும் எழுத முடிகிறது. அதனால்,



ஆசிரியர்களும் என்னைப் பாராட்டுகிறார்கள். அப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அதுவே என்னை மேலும் வாசிக்கத் தூண்டுகிறது. நான் மேலும் அதிகமாக வாசித்து அதிகமான நன்மைகளைப் பெறுவதில் ஆர்வமாக இருக்கிறேன்.

எம்.எஸ்.எம்.தாரிக்,
க/சென்.மேரிஸ் வித்தியாலயம்,நாவலப்பிட்டி.

# கொரில்லா பற்றி...



சிம்பன்சி, கிபன், கொரில்லா இந்த மூன்றும் குரங்கு இனத்தைச் சேர்ந்தவை. கொரில்லாவிற்கு வால் கிடையாது. இது 5 அடி 6 அங்குலம் வரை உயரம் உடையது. இவற்றின் எடை ஏறத்தாழ 150-160 கிலோ வரை இருக்கும். இவை இலை, தழை, பழம், கிழங்கு போன்றவற்றை உணவாகக் கொள்ளும். இவற்றின் ஆயுட்காலம் 30-50 ஆண்டுகளாகும். கொரில்லாக்களின் குடும்பம் Hominidea ஆகும். இதன் துணைக் குடும்பம் Hominiae ஆகும்.

கொரில்லாவின் காலின் நீளத்தைவிட கைகளின் நீளம் அதிகமாகும். அதனால்தான் அவை கைகளை ஊன்றி நடக்கின்றன. கொரில்லாவிற்கு பெரிய பற்களும் உறுதியான கடைவாய்ப் பற்களும் பலமான தாடை அமைப்பும் உள்ளது. இதனால், கடினமான உணவுகளை இலகுவாக இவற்றால் உண்ணமுடியும்.

ரிஸ்மினா முஸம்மில், அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தையொட்டி களுபோவிலை The kids of Anderson park pre-school/montessori பாலர் பாடசாலை மாணவர்கள் 'நாம் இலங்கையர்கள்' என்ற தொனிப்பொருளில் ஒற்றுமையின் பாதையை உணர்த்திய காட்சிகளைப் படங்களில் காணலாம்.



பம்மன்ன நாரங்கொடையைச் சேர்ந்த சகீர்-நிரோஷா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் நாதி, 26.02.2013 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# இலங்கையில் நவீனகால ஓவியங்கள் காணப்படும் இடங்கள்

## பொரல்ல கோதமி விகாரை ஓவியங்கள்

ஓவியம் வரைவோம் - 142


ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்



ஜோர்ஜ் கீட்

பொரல்ல கோதமி விகாரை ஓவியங்கள் ஜோர்ஜ் கீட் அவர்களால் 1939-1940 ஆம் ஆண்டுகளில் வரையப்பட்டன. இந்த ஓவியங்களை வரைவதற்கேற்ற சுவர்களை புகழ்பெற்ற கட்டடக்கலை நிபுணர் அன்ட்ரு பொயிட் நிர்மாணித்தார்.

ஜோர்ஜ் கீட் இங்குள்ள ஓவியங்களை மண்ணிற ரேகைகள் மூலம் வரைந்து, பின்னர் அவற்றுக்கு நிறம் தீட்டியுள்ளார். இங்குள்ள பிரதான ஓவியங்களாக தேவ ஆராதனை, மகாமாயதேவியின் கனவு, புத்தரின் பிறப்பு, வில்வித்தை கற்றல், கலைகள் கற்பித்தல், மங்களகர மான காட்சிகள், நான்கு முன் அறிகுறி கள், தலைமயிர் வெட் டுதல், ஆசிரியரைச் தேடிச்செல்லல், வயோதிபரைக் காணல், மாரபராஜய என்பனவற்றை குறிப்பிடலாம். இந்த ஓவியங்கள் 192 சென்ரிமீற்றர் உயரமான சுவரில் வரையப்பட் டுள்ளன. மனித உருவங்கள் நிஜ மனித உயரத்திற்கு ஏற்ப வரையப்பட்டுள்ளன.



கோதமி விகாரை ஓவியமொன்றின் ஒரு பகுதி

பல்வேறு வகையான ரேகைகளைப் பயன்படுத்தி உடலமைப்புகள் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இங்குள்ள ஓவியங்களில் சிவப்பு, பச்சை, வெள்ளை, மண்நிறம், கறுப்பு போன்ற நிறங்கள் பயன்படுத்தப்பட்டு, அவற்றில் முப்பரிமாணத் தன்மை சிறப்பாக வெளிப் படுத்த முயற்சிக்கப்பட்டுள்ள அதேவேளை, இயற்கைக் காட்சிகள், மரங்கள், செடிகள் போன்ற ஓவியங்கள் இயற்கையுடன் ஒன்றியதாகக் காணப்படவில்லை.





அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




க.லுஜீவன்,
இந்து தேசிய கல்., மாத்தளை.



ஆ.சஜீவன்,
அச்சுவேலி ம.வித்., அச்சுவேலி.



ஜெ.லிதுனா,
கொக்குவில் இந்துக் கல்., கொக்குவில்.



பீ.கிரிசானன்,
திருக்கோணேஸ்வர வித்.,
திருகோணமலை.



எம்.பயாஸ்,
நாச்சியாதீவு மு.ம.வித்.,
நாச்சியாதீவு.



ஞா.கோமிதா கிறிஸ்மந்தி,
விஜயரட்ணம் இந்து ம.கல்.,
நீர்கொழும்பு.




சி.கதம்பவி,
சாவகச்சேரி இந்துக் கல்.,
சாவகச்சேரி.



றபீனா முஹம்மட்,
ஜெயம் ம.ம.வித்., பொபியோகம.



எம். அக்ரம்,
அல்-அஸ்ஹர் ம.வித்., மன்னார்.



த.துலைக்ஷன்,
வவுனியா தமிழ் ம.வித்.,
வவுனியா.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பனைத் தெரிவோம்! நட்பினைப் பேணுவோம்!



இந்த உலகில் தாய், தந்தையின்றிக்கூட பலர் வாழ்கின்றார்கள். ஆனால், நண்பர்கள் இன்றி வாழ்பவர்கள் யாரும் இருக்க முடியாது. அதற்கமைய, அனைவருக்கும் அனைத்துக் காலங்களிலும் ஒரே ஒரு நண்பர்தான் இருப்பார் என்றும் கூற முடியாது. காலத்திற்குக் காலம் நண்பர் கூட்டம் மாறுபடலாம். ஆயினும், பெரும்பாலானவர்களுக்கு இணைபிரியா, உற்ற நண்பர்களும் வாய்ப்பதுண்டு. இத்தகைய நல்ல நண்பர் அமைவது இறைவன் கொடுத்த வரமாகும்.

தாய், தந்தை மற்றும் உடன் பிறந்தவர்கள் உறவை எம்மால் தீர்மானித்துக்கொள்ள முடியாது. ஆனால், நண்பன் அல்லது நண்பியின் உறவை எம்மால் நிச்சயமாகத் தீர்மானித்துக்கொள்ள முடியும். இந்த நட்புகளில் கூடாநட்பு எம்மைத் தீயவழியில் தள்ளிவிடலாம். அதேபோன்று நல்ல நட்பு வாழ்க்கையின் சிகரத்திற்கு எம்மை இட்டுச்செல்லலாம். எனவே, எமது வாழ்க்கையைத் திசைதிருப்பும் நட்புக்குரியவரைத் தேர்ந்தெடுக்கும்போது, அதீத கவனம் தேவையாகின்றது.

## நல்ல நண்பன்

ஒருவனிடமுள்ள தீய பழக்கவழக்கங்களிலிருந்து அவனை மீட்டெடுத்து வருபவனும் அவனது ஆரோக்கியம், முன்னேற்றம், நல்வாழ்வு என்பவற்றில் உறுதுணையாக இருப்பவனுமே மிகச் சிறந்த நண்பனாவான். அவ்வாறானவன் தனது நண்பன் நாளைய வாழ்வில் சிறந்த நன்நெறியாளனாக





வரவேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவனாகவும் காணப்படுவான்.

மனிதர்களில் ஒவ்வொரு மனிதரும் தமது வாழ்வில் உயர்வதற்கு ஒரு லட்சியத்தைக் கொண்டிருப்பார்கள். உண்மையான நண்பன் அல்லது நண்பி தமது நட்புக்குரியவர் தமது லட்சியத்தை அடைய உந்துசக்தியாகத் திகழ்வார். அதுமட்டுமன்றி; ஆரோக்கிய விமர்சனங்கள், கருத்துக்கள் ஊடாக, அவரது லட்சியப் பயணத்திற்கு வழிகாட்டியாகவும் திகழ்வர். சிறந்த ஒரு நண்பன் தனது நண்பனின் வெற்றியின்போது கைகுலுக்குபவனாக மட்டுமன்றி; தோல்வியின்போது கைகொடுத்து உதவுபவனாகவும் இருப்பான்.



## குற்றச் செயல்களிற்கு வழிவகுக்கும்

போதைப்பொருட்களின் பாவனை, பாலியல் ரீதியான குற்றச்செயல்கள், திருட்டு, பெரியோரை மதிக்காத தன்மை, ஊதாரித்தனம், பிறர் சொத்துக்கு தீங்கு விளைவித்தல், பழிவாங்கும் மனப்பாங்கு போன்ற சமூக விரோத செயல்கள் பெரும்பாலும் தீய நட்பினால்தான் ஏற்படுமென குறித்த துறையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் எமக்கு சுட்டிக்காட்டியுள்ளன.

## சுயநலவாதிகள்

தமக்கு தேவைகள் ஏற்படும்போது மாத்திரம் எம்முடன் வந்து ஒட்டி உறவாடி நட்பு கொள்ளும் பலரும் எம்மத்தியில் உள்ளனர். நட்பின் முக்கியத்துவமே ஆபத்தின்போது உதவுவதுதான். ஆனால், தேவை ஏற்படும் நேரத்தில் மட்டும் உறவு கொண்டாடுபவர்கள் சுயநலவாதிகள். எனவே, நண்பர்களைத் தெரிவு செய்யும்போது, அனைத்தையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

## நல்ல நண்பர்களுடன் பழகுதல்

நாம் நல்ல நண்பர்களுடன் பழகும்போது, எம்மிடமுள்ள நற்குணப்பண்புகள் அனைத்தும் மென்மேலும் உயரலாம். அத்துடன், எம்மிடமுள்ள தீய குணங்கள் நல்ல நண்பர்களுடன் உறவாடும்போது, அவர்களது செயற்பாடுகளை அவதானிப்பதனூடாக, அவர்களுடைய ஆரோக்கியமான அறிவுரைகளினூடாக எம்மை விட்டு அகன்று விடலாம்.

## நல்ல நண்பராய் இருப்போம்!

எங்களுடன் உறவாடும் நண்பர்களை அறிந்து அவர்கள் நல்லவர்களா? தீயவர்களா? திருந்தக்கூடியவர்களாக என்பதை சரியான முறையில் அளவிட வேண்டும். தீய நண்பர்களிடம் இருந்து உறுதியாகவும் விரைவாகவும் விலக முற்படவேண்டும். மோசமாக நண்பர்கள் இருப்பதைவிட, நண்பரே இன்றி வாழ்வது மேலானது. நாம் நல்ல நண்பரை எதிர்பார்ப்பது போன்றே பிறரும் தமக்கு எம்மிடமிருந்து சிறந்த நட்பையே எதிர்பார்க்கின்றனர். எனவே, நாமும் எப்போதும் நல்ல நண்பராகவே இருந்து எமது நட்பு வட்டத்தை ஆரோக்கியமாகப் பேணிக்கொள்வதே, மிகச் சிறப்பான செயற்பாடாக அமையும்.

**ப.அருந்தவம்**
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்,
யாழ்ப்பாணம்



### சைக்கிள் வெற்றியாளர் போட்டி இல - 12



சாம்.ஸ்டேன்லி,
கேம்பிரிட்ஜ் கல்லூரி,
கொட்டகலை, நுவரெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் கமலுக்கும் கடை முதலாளிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**මුදලාලි:** **එන්න මහත්තයා, ඔයාට මොනවද ඕනේ?**
என்ன மஹத்தயா, ஒயாட்ட மொனவத ஒனே?
முதலாளி: **வாருங்கள் ஐயா, உங்களுக்கு என்ன வேண்டும்?**

**කමල්:** **හාල් මොනවද තියෙන්නේ මුදලාලි?**
ஹால் மொனவத தியென்னே முதலாளி?
கமல்: **என்ன வகை அரிசி இருக்கிறது முதலாளி?**

**මුදලාලි:** **නාඩු හාල් තියෙනවා, සම්බා හාල් තියෙනවා.**
நாடு ஹால் தியெனவா, சம்பா ஹால் தியெனவா.
முதலாளி: **நாட்டரிசி இருக்கிறது, சம்பா அரிசி இருக்கிறது.**

**කමල්:** **නාඩු හාල් කීයද?**
நாடு ஹால் கீயத?
கமல்: **நாட்டரிசி என்ன விலை?**

**මුදලාලි:** **නාඩු හාල් කිලෝ එකක් රුපියල් හැටයි.**
நாடு ஹால் கிலோ எகக் ருபியல் ஹெட்டய்.
முதலாளி: **நாட்டரிசி ஒரு கிலோ அறுபது ரூபாய்.**

**කමල්:** **මට නාඩු හාල් කිලෝ දෙකක් දෙන්න.**
மட்ட நாடு ஹால் கிலோ தெக்கக் தென்ன.
கமல்: **எனக்கு நாட்டரிசி இரண்டு கிலோ தாருங்கள்.**

**මුදලාලි:** **මහත්තයාට වෙන මොනවද ඕනේ?**
மஹத்தயாட்ட வென மொனவத ஒனே?
முதலாளி: **ஐயாவுக்கு வேறு என்ன வேண்டும்?**

**කමල්:** **මට පිටි කිලෝ තුනක් දෙන්න.**
மட்ட பிட்டி கிலோ துனக் தென்ன.
கமல்: **எனக்கு மூன்று கிலோ மா தாருங்கள்.**

**මුදලාලි:** **පිටි කිලෝ එකක් රුපියල් අසූවයි. වෙන මොනවද ඕනේ මහත්තයා?**
பிட்டி கிலோ எகக் ருபியல் அசூவய்.
வென மொனவத ஒனே மஹத்தயா?
முதலாளி: **மா ஒரு கிலோ எண்பது ரூபாய். வேறு என்ன வேண்டும் ஐயா?**

**කමල්:** **මේ ඇති මුදලාලි. මගේ ගාන කීයද?**
மே எதி முதலாளி. மகே கான கீயத?
கமல்: **இவை போதும் முதலாளி. என்னுடைய கணக்கு எவ்வளவு?**

**මුදලාලි:** **රුපියල් තුන්සිය හැටයි මහත්තයා.**
ருபியல் துன்சிய ஹெட்டய் மஹத்தயா.
முதலாளி: **முன்னூற்றி அறுபது ரூபாய் ஐயா.**

**කමල්:** **මෙන්න මුදලාලි සල්ලි.**
மென்ன, முதலாளி சல்லி.
கமல்: **இதோ, முதலாளி காசு.**

### பயிற்சி

**இடைவெளி நிரப்புக**

1. ඔයාට .............................. ඕනේ?
2. සම්බා හාල් ..............................
3. .............................. දෙකක් දෙන්න.
4. මේ ඇති ..............................






**நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense**
**இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense**

**மேற்படி இரண்டுவகை வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.**

(அ) உனது சகோதரன் கதவுத் திறப்பை நேற்றுத் தொலைத்தான்.
Your brother lost the door-key yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஆ) உனது சகோதரன் கதவுத் திறப்பை ஏற்கனவே தொலைத்துவிட்டான்.
Your brother has already lost the door-key.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(இ) உனது சகோதரன் கதவுத் திறப்பை தற்போதுதான் தவறவிட்டுள்ளான்.
Your brother has just lost the door-key.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

- Your brother lost.
உனது சகோதரன் தொலைத்தான். (தவறவிட்டான்)

- Your brother has lost.
உனது சகோதரன் தொலைத்துவிட்டான். (தவறவிட்டுள்ளான்)

(ஈ) உனது சகோதரி காசுப்பை ஒன்றை நேற்றுக் கண்டெடுத்தாள்.
Your sister found a purse yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(உ) உனது சகோதரி காசுப்பை ஒன்றை தற்போதுதான் கண்டெடுத்துள்ளாள்.
Your sister has just found a purse.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

- Your sister found.
உனது சகோதரி கண்டெடுத்தாள்.

- Your sister has found.
உனது சகோதரி கண்டெடுத்துள்ளாள்.

(ஊ) எங்கள் நாய் நேற்று சுவரின் மேலாகப் பாய்ந்தது.
Our dog jumped over the wall yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(எ) எங்கள் நாய் ஏற்கனவே சுவரின் மேலாகப் பாய்ந்துவிட்டது.
Our dog has already jumped over the wall.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஏ) எங்கள் நாய் தற்போதுதான் சுவரின் மேலாகப் பாய்ந்துள்ளது.
Our dog has just jumped over the wall.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

- Our dog jumped.
எங்கள் நாய் பாய்ந்தது.

- Our dog has jumped.
எங்கள் நாய் பாய்ந்துவிட்டது. (பாய்ந்துள்ளது)

(ஐ) உனது தந்தை நேற்று இந்தியாவுக்குப் போனார்.
Your father went to India yesterday.

(ஒ) உனது தந்தை ஏற்கனவே இந்தியாவுக்குப் போய்விட்டார்.
Your father has already gone to India.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிக்ஃபூட்

# குரங்கு மனிதர்கள் உண்மையா? பொய்யா?

இந்த முக்கியமான புகைப்படம் 1937 இல் 'ஹெட் லவின்' என்ற நெதர்லாந்து சஞ்சிகையில் வெளியாகியிருந்தது. ஓர் ஆணும் பெண்ணும் உள்ள இந்த புகைப்படத்தில் மற்றுமொரு விகாரமான மனிதரும் இருந்தார். பார்த்தவுடன் ஒரு குரங்கினைப் போன்று தோற்றமளிக்கும் இந்த நபரை பிரேசிலின் வனாந்தரப்பகுதியில் இருந்து கண்டுபிடித்துள்ளதாக அந்த சஞ்சிகையில் விபரங்கள் வெளியாகியிருந்தன. மனித பரிணாமத்தில் 'காணாமல் போன வேர்' இதுவல்லவா என்று அதில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பல தசாப்தங்களின் பின்பு இவ்விடயம் பற்றி மீண்டும் உரையாடல்கள் ஆரம்பமாயின. இணையத்தில் இந்த புகைப்படம் உலகம் முழுவதும் பரவியதாலேயே மீண்டும் இவ்விடயம் குறித்த கதைகள், வாதங்கள் பரவ ஆரம்பித்தன.

பல மில்லியன் இணையப் பாவனையாளர்களை இந்தப் புகைப்படம் ஈர்க்க ஆரம்பித்துள்ளது. எனினும், மனித பரிமாண வளர்ச்சியின் ரகசியத்தை வெளிப்படுத்தும் புகைப்படம் இதுவல்ல என்று பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். செயற்கையாக உருவாக்கப்பட்ட மனித உரு அதுவென்று பலரும் இணையத்தில் கருத்துக் கூறி இருந்தனர். வனாந்தரத்தில் இருந்து பிடித்துக் கொண்டு வந்திருந்த இந்தக் குரங்கு மனிதன் முகத்தை உரோமங்கள் இன்றி சவரம் செய்திருப்பது மிகப் புதுமையாக இருப்பதாகவும், சிலர் இது ஓர் அப்பாவி அங்கவீனரின் ஜோடிக்கப்பட்ட படம் என்றும் கருத்துக் கூறியிருந்தனர்.

1920 இல் தென் அமெரிக்காவிலும் கொலம்பியாவிலும், வெனிசுலாவிலும் ஆய்வு ஒன்றை மேற்கொண்ட சுவிட்ஸர்லர்ந்து நாட்டவரான பிரன்கொய்ஸ் டிலொயிஸ் என்பவர் மர்மமான ஒரு விலங்கைக் கண்டுபிடித்தார். 'டாரா' நதிக்கரையில் முகாமிட்டிருந்தவேளை ஒன்றரை மீற்றர் நீளம் கொண்ட குரங்குகள் போன்ற தோற்றம் கொண்ட இரண்டு விலங்குகள் முகாம் அருகில் வந்து சத்தமிட்டுள்ளன. இதனால், அஞ்சிய அவர்கள் தற்பாதுகாப்புக் கருதி ஒரு விலங்கின்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். அவர்களுக்கு அதுவரை கிடைத்திராத அரிய வகை விலங்கே அது என்று பின்னரே அவர்களுக்குப் புரிய வந்தது.


1937 இல் வெளியான குரங்கு மனிதன் புகைப்படம்



குரங்கு போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்த போதிலும் இக்குரங்குக்கு வால் இருக்கவில்லை. வடக்கு மற்றும் தென் அமெரிக்கா சார்ந்த பகுதிகளில் வாழும் குரங்குகளுக்கு 36 பற்கள் இருக்கின்ற போதிலும், இந்த குரங்குக்கு 32 பற்கள் மட்டுமே இருந்துள்ளன.

முகத்தின் நாடிப் பகுதியினைத் தூக்கி நிறுத்தி படம் பிடித்த அந்த ஆய்வாளர்கள், அந்த விலங்கின் தோலை நீக்கி கபாலத்தையும் பெற்றுக்கொண்டனர். எனினும், ஆய்வின்போது எதிர்கொண்ட பல பிரச்சினைகள் காரணமாக, அந்த குரங்கின் மாதிரிகளைக் கைவிட்டு வர நேர்ந்தாக டிலொயிஸ் பின்பு தெரிவித்திருந்தார். எனினும், 1929 இல் மானிடவியல் விஞ்ஞானி ஒருவருக்கு இந்த புகைப்படங்கள் கிடைத்துள்ளன.


யொவி

எவ்வாறாயினும், அன்று முதல் இன்று வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள குரங்குகளுடன் ஒப்பிடும்போது, இந்த விலங்கின் நெற்றி, நெஞ்சுப்பகுதி, கைகள் வித்தியாசமாக இருப்பதாக ஆய்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஆய்வு முடிவுகள் இந்த விலங்கு குரங்கு மனிதன் என்று நிரூபணப்படுத்தியிருந்தன. இந்த மர்மம் நிரம்பிய குரங்கு மனிதர்கள் குறித்து உலகின் பல்வேறு நாடுகளிலும் கலாசாரங்களிலும் பலவிதமான கதைகள் உலவி வருகின்றன. வட அமெரிக்காவின் 'பிக்புட்' போன்று இமயமலையின் 'யெட்டி' என்பனவும் இவற்றுள் முக்கியமானவை. அதேபோன்று 'யொவி' என்ற குரங்கு மனிதன் உலகில் வாழ்ந்துவந்ததாக அவுஸ்திரேலிய அபோரிஜினி மக்கள் நம்புகின்றனர்.

## 2012, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்



குருணாகல், ரமுக்கந்தன ரிதீகம அல்-ஹுதா முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.எப்.அம்னா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,மஹ்ரூப்-பரீனா தம்பதியரின் புதல்வியாவார்.



குருணாகல், ரமுக்கந்தன ரிதீகம அல்-ஹுதா முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.ரிதாஸ், 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சனூன்-ரிஸ்வானா தம்பதியரின் புதல்வியாவார்.



கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சாரா மர்யம் அஷ்பாக், 177 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர் எம்.அஷ்பாக்-நுஸ்ரத் தம்பதியரின் புதல்வியாவார்.



கல்ஹின்னை க/அல் மனார் தேசிய பாடசாலை மாணவன் எம்.இசெட்.யூசுப் முஹம்மட், 178 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.சனீர்-ஷிபா தம்பதியரின் புதல்வராவார்.



கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி ஏ.எம்.ஃபாத்திமா நுஹா, 179 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஏ.ஆர்.அஸாட் முஹம்மத்-றிசானா தம்பதியரின் புதல்வியாவார்.


## விஜய் உடன் 'TOP NEWS' வழங்கும் 2 8GB பென் ட்றைவ் பரிசுகள்!!!




ஒவ்வொரு மாத இறுதியிலும் இங்கு கேட்கப்படும் கேள்விக்கான விடை 'Top News' SMS சேவையில் இடம்பெறும் அறிவுபூர்வ தகவலில் உள்ளடங்கியுள்ளது. அந்த விடையைக் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

கேட்கப்படும் கேள்விக்கான விடையினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் Dialog தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'விஜய்' பத்திரிகையில் ஒவ்வொரு மாதத்திற்குமென வாராந்தம் வழங்கப்படும் அனைத்துக் கூப்பன்களையும் சேகரித்து மாத இறுதியில் கேட்கப்படும் கேள்விக்கான விடையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். 'விஜய்' பத்திரிகையில் வழங்கப்பட்டுள்ள கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் 2 நபர்களுக்கு 8GB பென் ட்றைவ் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

அனுப்பும் முறை:





கூப்பன் - பெப்ரவரி
(இந்த மாதத்திற்கான அனைத்து கூப்பன்களையும் சேகரித்து ஒன்றாக அனுப்பவும்)


இல - 03

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3
நிழற்றப்பட்டுள்ள பகுதியைக் குறிக்கும் பின்னத்தில் வட்டமிடுக

1.  $\frac{3}{6}$ $\frac{3}{5}$ $\frac{4}{8}$

2.  $\frac{4}{5}$ $\frac{1}{3}$ $\frac{3}{4}$

3.  $\frac{5}{6}$ $\frac{3}{7}$ $\frac{1}{8}$

4.  $\frac{2}{7}$ $\frac{4}{8}$ $\frac{3}{6}$

## அறிவுக்கு விருந்து - 402 விடைகள்

**போட்டி: 01**
1. நகுலன்
2. யசோதரகாவியம்
3. அமுதவிழா
4. பந்தி


**போட்டி: 02**
சிரி, சிகை, சிரிப்பு, சிறப்பு, திரி, திற, திப்பு, திறப்பு, திகை, நசி, நரி, நடி, நதி, நகை, நடிகை, புசி, புகை, புரி, கை, கைதி, கைப்பு

**போட்டி: 03**
8 தவளைகள்

**போட்டி: 04**




**போட்டி: 05**




## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 402 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜ.அமிர்தனா, விவேகானந்த நகர், கிளிநொச்சி.

**போட்டி: 02**
எம்.ஆசாத், ஹொரம்பாவ, நாரம்மல.

**போட்டி: 03**
எஃப்.சாகியா, நீரெல்ல, அக்குறனை.

**போட்டி: 04**
எஸ்.டில்சான், உடபாகை, தெரணியகல.

**போட்டி: 05**
எம்.ரஸ்மி, பேறகஸ்வத்தை, வெளிமடை.

**பாராட்டுப் பெறுவோர்:**
- ப.பவளச்செல்வி, பண்டத்தரிப்பு.
- எஃப்.இம்ரானா, வாழைச்சேனை - 05.
- எம்.றஹ்மி, கலுகமுவ.
- சி.கதம்பவி, சாவகச்சேரி.
- எஃப்.அம்ரா, யக்கலவத்த.
- ஆர்.கிறிஸ்தோபர், அக்கரபத்தனை.
- மா.சகானுதன், நாவக்குடா.
- எம்.ஜெம்சித், பெரிய நீலாவணை-01.
- எம்.ஆதிபா, பஹலபிடிய.
- தருன் ஸ்ரீநாத், கண்டி.





தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.02.27 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 405
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 1




## ஒத்தகருத்துடைய சொற்களை இணைக்க — 5

| | |
|---|---|
| 1. ஆணை | 1. தலைப்பாகை |
| 2. புலமை | 2. வறுமை |
| 3. மிடி | 3. கட்டளை |
| 4. உருமால் | 4. உணவு |
| 5. சத்தியம் | 5. அறிவு |
| 6. இரை | 6. உண்மை |

## இடைவெளிகளை நிரப்புக — 2




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 21



### மேலிருந்து கீழ்
01. காவல் செய்பவர்.
02. சில கருவிகளில் பிடித்துத் தூக்குவதற்கு உள்ள பகுதி.
03. நீர் நிரப்பி வைக்க உதவும்.
04. அரவம்.
06. ‘அழு’ என்பதன் எதிர்ப்பதம். (தலைகீழ்)
07. பிரதம மந்திரி என்றும் சொல்லலாம்.
11. விளக்கில் நெருப்புப் பற்ற வைக்கும் பகுதி.
13. இது ஒலிக்கும். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்
01. பெண்.
04. சீனியைக் காய்ச்சும்போது வருவது. (மாறியுள்ளது)
05. வதியும் இடம்.
08. கூடை, கதிரை பின்னுவதற்குப் பயன்படுவது.
09. அடிக்கவோ, தாக்குவதற்கோ பயன்படும். (மாறியுள்ளது)
10. பெண் குரங்கு.
12. ‘தேவர்’ என்றும் பொருள்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.20 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மா | லை | ப் | பொ | ழு | 2 து |
| 3 கா | 4 வீ | | | | ற |
| ண | | | 5 த | | வீ |
| ம | ள | க | ங் | 6 ம | |
| | | | 7 க | ங் | கை |
| | ரு | மா | ம் | 8 கை | |

## 4

A) வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களை வைத்து குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க




B) இங்கே 5 சாய்சதுரங்கள் உள்ளன. அவற்றிற்கு நிறந்தீட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.



1907 ஆம் ஆண்டில் வசந்த காலத்தில் ப்ரவுன் சீ தீவில் நடைபெற்ற முதலாவது பாசறைத் திடலும் அத்தீவின் தற்போதைய நிழற்படமும்.




ப்ரவுன் சீ தீவின் முதலாவது சாரணப்பாசறைக்கு வருகை தந்த சாரணர்கள்.



மரணித்த பேடன் பவல் அவர்களின் பூதவுடலை ஏந்திய வாகனம் சாரணர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படல்.

# இலங்கையில் உள்ள தமிழ் சாரணர்கள் மற்றும் மாவட்டங்கள் பற்றித் தெரிந்துகொள்வோம்




1941 ஜனவரி 08 ஆம் திகதி கென்யாவின் நியேரி எனும் இடத்தில் பேடன் பவல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

யாழ்.மாவட்டம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, காங்கேசன்துறை என நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு தொடக்கம் முதலாவது மாவட்ட ஆணையாளராக கோ.செல்வவிநாயகமும் இரண்டாவது மாவட்ட ஆணையாளராக எஸ்.ஜெகநாதனும் கடமையாற்றினர். தற்போதைய மாவட்ட ஆணையாளராக எம். இரவீந்திரன் கடமையாற்றுகின்றார்.

முதலாவது சங்கத் தலைவர்
வி.லேசம்மயில்
செயலாளர்
எஸ்.சிற்றம்பலம்
பொருளாளர்
ஏ. அப்பாத்துரை
நிறைவேற்றுத் தலைவர்
எஸ்.ஆர்.அரியரத்தினம்

## ஆரம்பக்குழுக்கள்

ஹாட்லிக் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி, வேலாயுதம் ம.ம. வித்தியாலயம், நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கோணேஸ்வராக் கல்லூரி, கரணவாய் ம.ம.வித்தியாலயம்.

## காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க வரலாறு

1980 ஒக்டோபர் 13 ஆம் திகதியன்று சாரணர் பிரிவிற்கென யாழ்.மாவட்டத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கும்பொழுது காங்கேசன்துறை ஒரு மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. இந்த மாவட்ட அங்குரார்ப்பணம் அன்றைய இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மாணவ கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. அன்றைய காலகட்டத்தில் சங்கத்தின் தலைவராக கே.மகாதேவ, உதவி அரசாங்க அதிபர் தெல்லிப்பழை செயலாளராக வே.சி.கணேசலிங்கம்-சட்டத்தரணி, பொருளாளராக சி.ஐகலைமகான்- ஆசிரியர் மற்றும் செயற்குழுத் தலைவர் இரா.சண்முகரட்ணம் ஆகியோர் சேவையாற்றினார்கள்.

விஜய் சாரணர் உலகம்

- முதலாவது மாவட்ட ஆணையாளர். இ.விசுவநாதன் அவர்கள். (1980-1985)
- இரண்டாவது மாவட்ட ஆணையாளர் த.நா.போஜன் அவர்கள். (1986-1996)
- மூன்றாவது மாவட்ட ஆணையாளர் ந.செளந்தராஜன் அவர்கள். (1997-2002)
- நான்காவது மாவட்ட ஆணையாளர் சு.சிவபாதரட்ணம் அவர்கள். (2002-2007)
- ஐந்தாவது மாவட்ட ஆணையாளர் ந.இரவீந்திரன் அவர்கள். (2008 இன்று வரை)

தயாரிப்பு:
**சாரணர் ஜெரம் டி சில்வா**



1907 ஆம் ஆண்டு வசந்த காலத்தின்போது, ப்ரவுன் சீ தீவில் அதிகாலையில் பேடன் பவல் தமது கூடாரத்திற்கு அருகே கூடு ஊது குழலுடன் இருப்பதைக் காணலாம்.




பேடன் பவல் அவர்களின் நினைவுக் கல்லறை.



பேடன் பவல் கூடு ஊது குழலுடன்.



PoxTu எனும் வீடு (இன்று)



முதலாவது பேரணிக்காக, சாரணர் தந்தை பேடன் பவலின் வருகை.





இரு வாரங்களுக்கு ஒருமுறை வெளியிடப்பட்ட Scouting for Boys ட்ழலன் எனும் நூல்களின் முன் அட்டைகளைக் காணலாம். இவற்றின் முதலாவது வெளியீடு 1908 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி புதன்கிழமை வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு உதவிய 'ஃபேஸ்புக்'

விநோதமான ஒரு பூனையைப் பற்றிய ஒரு தகவல் அண்மையில் ஸ்கொட்லாந்து நாட்டிலிருந்து அறியக்கிடைத்தது. அதாவது, இந்த பூனையின் முன் இரண்டு கால்களிலும் எலும்புகள் கிடையாது. ஹார்வி என பெயரிடப்பட்டுள்ள இந்த பூனைக்கு வயது ஐந்து மாதங்களேயாகும். சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின்மூலம் இதன் எலும்புகளற்ற இரண்டு கால்களுக்கும் எலும்புகளுக்குப் பதிலாக இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தற்போது 'ஹார்வி' ஆரோக்கியமான நிலையில் இருப்பதாக கூறப்படுகின்றது. இதிலுள்ள சிறப்பு என்ன தெரியுமா? இந்த பூனையின் கால்களில் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான நிதியினை 'பேஸ்புக்' ஊடாகவே திரட்டியுள்ளனர். பிராணிகளுக்கு உதவுவதற்கு ஆர்வம் உள்ள பலர் 'ஃபேஸ்புக்' ஊடாக ஒன்றிணைந்து மேற்படி நிதியினை வழங்கி அந்த பூனைக்கு உதவியுள்ளனர்.



# படம் மாறிய செய்தி

ஸ்பெயின் நாட்டிலிருந்து வெளியாகிய 'EL PAIS' என்ற பத்திரிகையில் அண்மையில் வெளியாகிய ஒரு புகைப்படம் பெரும் பிரச்சினையைக் கிளப்பிவிட்டது.






அதாவது, வெனிசுவெலா ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் புற்று நோயினால் அவதிப்படுவதாக செய்தியை வெளியிட்ட இந்த பத்திரிகை குறித்த செய்தியில் சாவேஸின் படத்திற்குப் பதிலாக வேறொருவரது படத்தைப் பிரசுரித்துவிட்டது. இதுதான் பிரச்சினைக்கே காரணமாகியது. இது மன்னிக்க முடியாத குற்றமாகவே வெனிசுவெலா அரசாங்கமும் அந்நாட்டு மக்களும் கருதினர். ஜனாதிபதியின் படத்திற்குப் பதிலாக இன்னொருவரது படத்தைப் பிரசுரிப்பதென்றால் அவர்தான் வெனிசுவெலாவின் ஜனாதிபதி என்பதாக அர்த்தப்பட்டுவிடுமல்லவா? எனவே இதன் விபரீதத்தை உணர்ந்த EL PAIS பத்திரிகை மன்னிப்புக் கோரியதுடன், முடிந்தவரையில் குறித்த பிரதிகளை மீளப்பெற்றுக்கொண்டது.

# உணவாகும் கம்பளிப்பூச்சி

கம்பளிப்பூச்சி என்றாலே உடம்பு அரிக்கத் தொடங்கிவிடும். அது உடம்பில் பட்டால் அரிப்பிலிருந்து எவருமே தப்ப முடியாது. ஆனால், இத்தகைய கம்பளிப்பூச்சியானது, உணவாகவும் உட்கொள்ளப்படுகின்றதென்றால் நம்புவீர்களா? ஆம்! நம்பித்தான் ஆகவேண்டும்.

சிம்பாப்வேயின் கிராமப்புறப் பகுதிகளில் பிரதான உணவு வேளையில் உணவில் சேர்க்கப்படுகின்ற இன்றியமையாத ஒன்றாகவே கம்பளிப்பூச்சி அமைந்துள்ளது. குறிப்பாக 'கோனிம்பிராஸியா பெலினா' என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற கம்பளிகளே இவ்வாறு உணவாக உட்கொள்ளப்படுகின்றன. இந்த கம்பளியின் மாமிசமானது, மாட்டிறைச்சியினைப் போன்று மூன்று மடங்கு புரோட்டீன் சத்தினைக் கொண்டது என்றும் கூறப்படுகின்றது.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 20, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org